**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :564/2008 பொருள் எண்.28

**வயது முதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, 9வது மண்டலத்தில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரியும் திரு.கே.ஆர்.சேகர், என்பவர் 31.10.2008 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார். தனியர் 24.11.1975 அன்று சென்னை மாநகராட்சியில் இளநிலை எழுத்தராக பணியில் சேர்ந்தார். 24.11.1975 முதல் அப்பதவில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. 23.11.1977 தேதி முதல் அப்பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. 07.03.1984 அன்று உதவியாளராக பதவி உயர்வு பெற்று அப்பதவியில் 07.03.1984 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. 08.01.1997 அன்று உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று 08.01.1997 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. 11.08.2000 அன்று வரி மதிப்பீட்டாளராக பதவி உயர்வு பெற்று 11.08.2000 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. மேலும், 07.09.2006 அன்று முதல் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று அரசாணை எண்.360, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.3) துறை, நாள்.01.08.2007ன்படி 07.09.2007 முற்பகல் முதல் உதவி வருவாய் அலுவலர் பதவியில் அரசு உறுதியாக்கம் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது. உதவி வருவாய் அலுவலர் பதவியில் 07.09.2006 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

இவர் மீது துறை ரீதியாக எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் தற்சமயம் நிலுவையில் இல்லை. மேலும், இவர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் என்றும் பாக்கி தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை எனவும், அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட தணிக்கை குறித்த அறிக்கையின்படி இவரைப் பொறுப்பாக்கும் தணிக்கை தடையோ நிதி இழப்பீடு இனங்களோ ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் வகித்து வரும் பதவி வகுப்பு–2ஐ சார்ந்ததால் இவரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளிப்பதற்கு மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, திரு.கே.ஆர். சேகர், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–9, என்பவரை 31.10.2008 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல தனியருக்கு கூடுதலாக வழங்கப்பட்ட மிகை ஊதியம் ஏதும் கண்டறியப்பட்டால் அதனை ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் இவர் மீது பின்னர் தெரியவரும் தணிக்கைத் தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் சரி செய்யப்படாமல் நிலுவையிலுள்ள முன்பணம் ஆகிய இனங்கள் ஏதேனும் இருப்பது தெரியவரின் இவரது ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் 31.10.2008 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :565/2008 பொருள் எண்.29

### வயது முதிர்வு ஓய்வு

திரு.ஆர்.மாறன் இளங்கோ, உதவி செயற்பொறியாளர், பணித்துறை, பணியிடம் பேருந்து சாலைகள் துறை, அவர்கள் 31.10.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். அவர் சென்னை மாநகராட்சி பணியமைப்பு பிரிவு வகுப்பு இரண்டு என்பதால் வயது முதிர்வு ஓய்வு அனுமதி அளிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

திரு. ஆர். மாறன் இளங்கோ அவர்கள் சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக கட்டடத் துறையில் வரைபடவரைவாளர் ஆக பணி நியமனம் செய்யப்பட்டு 03.06.75 அன்று பிற்பகல் பணியிலமர்த்தப்பட்டார். தனியர் 20.04.79 முதல் ஓவர்சீயர் ஆகவும், 22.05.79 முதல் இளநிலைப் பொறியாளர் ஆகவும் பதவி உயர்வு பெற்றார். 22.05.89ல் தேர்வு நிலை இளநிலைப் பொறியாளர் ஆகவும், 22.05.99ல் தேர்வு நிலை இளநிலைப் பொறியாளர் ஆகவும், 20.11.97ல் உதவி செயற் பொறியாளர் ஆக உயர்த்தப்பட்டார் (Upgraded) மேலும் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண் ஈ1/20946/2007 நாள் 08.06.2007ன்படி தனியருக்கு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

திரு.ஆர். மாறன் இளங்கோ, உதவி செயற் பொறியாளர், பணியிலமர்த்தப்பட்ட 03.06.75 முதல் இந்நாள் வரை பணி புரிந்த துறைகளில் அவர் மீது தணிக்கைத் தடை, ஒழுங்கு நடவடிக்கை, நேர்செய்யப்பட வேண்டிய முன்பணங்கள் ஏதும் நிலுவையில் உள்ளதா என்ற விவரம் தெரிவிக்க தனியர் பணிபுரிந்த துறைகளை கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேற்பார்வை பொறியாளர், கட்டடத் துறை அவர்களின் 10.03.2008 நாளிட்ட குறிப்பில், திரு.ஆர். மாறன் இளங்கோ அவர்கள் கட்டடத் துறையில் 03.06.75 முதல் 19.04.79 வரை வரைபடவரைவாளர் ஆகவும், 20.04.79 முதல் 21.05.79 வரை ஓவர்சீயர் ஆகவும் பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஆர். மாறன் இளங்கோ அவர்கள் பணித்துறையில் இளநிலைப் பொறியாளர் ஆக 22.05.79 முதல் 26.07.79 வரை பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை.

மண்டல அலுவலர் 10 அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பில் திரு,ஆர். மாறன் இளங்கோ அவர்கள் மண்டலம் 10ல் 27.07.79 முதல் 04.12.90 வரை பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஆர். மாறன் இளங்கோ அவர்கள் பணித்துறையில் இளநிலைப் பொறியாளர் ஆக 05.12.90 முதல் 11.07.94 வரை பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை.

மண்டல அலுவலர் 3 அவர்களின் 21.02.2008 நாளிட்ட குறிப்புரையில் திரு.ஆர். மாறன் இளங்கோ அவர்கள் மண்டலம் 3ல் 12.07.94 முதல் 26.07.95 வரை பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேற்பார்வை பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களின் 25.09.2008 நாளிட்ட குறிப்புரையில், தனியர் மீது பேருந்து சாலைகள் துறையில் 27.07.95 முதல் 08.03.99 வரை பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஆர். மாறன் இளங்கோ அவர்கள் பணித்துறை, தனியார் தெருக்கள் பிரிவில் உயர்த்தப்பட்ட (Upgraded) உதவி செயற் பொறியாளர் ஆக 09.03.99 முதல் 26.06.2001 வரை பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை.

மண்டல அலுவலர் 6 அவர்களின் 12.03.2008 நாளிட்ட குறிப்பில் மண்டல அலுவலகம்– 6ல், தனியர், உதவி செயற் பொறியாளராக 27.06.2001 முதல் 03.08.2001 வரை பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேற்பார்வை பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களின் 25.09.2008 நாளிட்ட குறிப்புரையில் தனியர் மீது பேருந்து சாலைகள் துறையில் 04.08.2001 முதல் தற்போது வரை பணிபுரியும் காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

<u>ப.து.ந.க.எண்.அ3/247/2008</u>

விழிப்புப் பணி அலுவலரின் 24.09.2008 நாளிட்ட குறிப்புரையில் தனியர் மீது சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்க செயலாளர் அவர்களின் 24.04.2008 நாளிட்ட கடிதத்தில் தனியர் சங்க உறுப்பினரல்ல என்றும், அவர் சங்கத்திற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லையென குறிப்பிட்டுள்ளார்.

04.03.2003 நாளிட்ட சுற்றறிக்கையில் தன்விருப்ப ஓய்வு, வெளிநாட்டில் வேலை வாய்ப்பு மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கு மெடல் வழங்குதல் தவிர மற்ற இனங்களுக்கு விழிப்பு மற்றும் லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறையிடமிருந்து கருத்துரை பெறத்தேவையில்லை. என குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் சென்னை மாநகராட்சிக்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லை.

எனவே. எதிர்காலத்தில், தணிக்கைத் தடைகளோ அல்லது சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு எதற்கேனும் திரு. ஆர். மாறன் இளங்கோ, உதவி செயற் பொறியாளர், பணித்துறை (பணியிடம் பேருந்து சாலைகள் துறை) இரண்டாம் வகுப்பு அலுவலர் அவர்கள் பொறுப்பு ஏற்கக்கூடியவர் என பின்னர் தெரியவரின் அத்தொகையினை அவரது ஓய்வூதியப் பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னார்க்கு 31.10.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு அனுமதி அளிக்க நியமனக்குழு மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி2/35599/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 16.10.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :566/2008 பொருள் எண்.30

<u>ஓய்வூதியம்</u>

திரு.டி.தேவதாஸ் சந்திரசேகர், மேற்பார்வை பொறியாளர் பணித்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.10.2007ல் தன்விருப்ப ஓய்வு பெற்றார். தனியர் 30 வருடங்கள் 05 மாதங்கள் 06 நாட்கள் (அ) 61 அரைஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3005/எ4/2008, நாள்.21.09.2008 சான்றின்படி 01.11.2007 முதல் தன்விருப்ப ஓய்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.10425/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வுதியத்திலிருந்து ரூ.3,475/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,76,214/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.ராணி தேவதாஸ் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10425/– ஓய்வூதியருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அல்லது இறப்பிற்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரை, அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.6255/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் வகித்த பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகைப்படுத்தப்படாத பதவி ஆனதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.டி.தேவதாஸ் சந்திரசேகர், மேற்பார்வை பொறியாளர், பணித்துறை, அவர்களுக்கு 01.11.2007 முதல் ஓய்வூதியமாக ரூ.10425/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,475/– (ரூபாய் மூவாயிரத்து நானூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,76,214/– (ரூபாய் நான்கு லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து இருநூற்று பதிநான்கு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.10425/–லிருந்து ரூ.6950/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.ராணி தேவதாஸ், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10425/– ஓய்வூதியருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அல்லது இறப்பிற்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரை, அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.6,255/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/35656/2008**
**ஆணையாளர் அவர்களின் 15.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :567/2008 பொருள் எண்.31

**ஓய்வூதியம்**

டாக்டர் ட்டி.விஜயகுமாரி, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் பணியிலிருந்து 02.08.2005 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வு பெற்றார். தனியர் 28 வருடங்கள் 11 மாதங்கள் 20 நாட்கள் (அ) 58 அரைஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.2963/எ4/2008, நாள்.17.09.2008 சான்றின்படி 03.08.2005 முதல் தன்விருப்ப ஓய்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.6417/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,18,536/– மற்றும் ஓய்வுதியத்திலிருந்து ரூ.2,139/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,09,300/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.என். மகாலிங்கம் அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6,417/– பணியாளருக்கு 65 வயதாகும் வரை அல்லது மறைவுக்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரை, பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.3983/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் ட்டி.விஜயகுமாரி, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களுக்கு 03.08.2005 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.5583/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியமாக மாதம் ரூ.6,417/–ம் இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,18,536/–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.3,08,502/– நேர் செய்து மீதத் தொகை ரூ.10,034/– (ரூபாய் பத்தாயிரத்து முப்பத்தி நான்கு மட்டும்) வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,139/– (ரூபாய் இரண்டாயிரத்து நூற்று முப்பத்தி ஒன்பது மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,09,300/– (ரூபாய் மூன்று லட்சத்து ஒன்பதாயிரத்து முன்னூறு மட்டும்) ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.2,69,101/–யை நேர்செய்து மீதம் ரூ.40199/– வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.6417/–லிருந்து ரூ.4278/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு. மகாலிங்கம் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6417/– ஓய்வூதியருக்கு 65 வயதாகும் வரை அல்லது மறைவுக்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரையிலும், பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.3983/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.13/28779/2008**
**ஆணையாளர் அவர்களின் 16.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :568/2008 பொருள் எண்.32

**ஒய்வூதியம்**

டாக்டர் (திருமதி) ஜே.ஏ.லாசியஸ், மண்டல அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.01.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 27 வருடங்கள் 04 மாதங்கள் 12 நாட்கள் (அ) 55 அரைஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.2648/எ4/2008, நாள்.29.08.2008 சான்றின்படி 01.02.2007 முதல் வயது முதிர்வு ஓய்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.8904/— இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/— மற்றும் ஓய்வுதியத்திலிருந்து ரூ.2,968/— தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,72,544/— பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.ஆர்.அரசநாதன் அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8,904/— 01.01.2014 வரையிலும் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 02.01.2014 முதல் ரூ.5828/ பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் ஜே.ஏ.லாசியஸ், மண்டல அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களுக்கு 01.02.2007 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியமான ரூ.6556/—லிருந்து அதிகரித்து ஓய்வூதியமாக மாதம் ரூ.8904/—ம் இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/—ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/— பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/—ல் கடைசி ஊதிய சான்றின்படி பிடித்தம் செய்யப்பட வேண்டிய ரூ.1,51,766/— பிடித்தம் செய்து மீதத் தொகை ரூ.1,10,734/— (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரத்து ஏழுநூற்று முப்பத்தி நான்கு மட்டும்) வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2968/— (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி எட்டு மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,72,544/— (ரூபாய் மூன்று லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து ஐநூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.8904/—லிருந்து ரூ.5936/—ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.அரசநாதன், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8904/— 01.01.2014 வரையிலும் அதன் பின்னர் 02.01.2014 முதல் ரூ.5828/— வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி13/28465 /2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 15.09.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :569/2008 பொருள் எண்.33

<u>ஓய்வூதியம்</u>

திருமதி.பி.ஏ.சம்பூரணம், மருத்துவ அலுவலர், மண்டலம்–9, அவர்கள் கடந்த 31.01.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.2500/எ4/2008, நாள்.11.08.2008ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.10699/– 01.02.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.6909/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.4,46,350/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,89,073/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.1,57,277/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர் திரு.ஆர்.எஸ்.பாரதி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.10669/– 14.01.2013 முடிய மற்றும் ரூ.6402/– 15.01.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 11.08.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி திருமதி.பி.ஏ.சம்பூரணம், ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர்க்கு, மேற்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/35658 /2008**
**ஆணையாளர் அவர்களின் 07.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :570/2008 பொருள் எண்.34

**ஓய்வூதியம்**

டாக்டர் டி.சபிதா, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.08.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 28 வருடங்கள் 07 மாதங்கள் 05 நாட்கள் (அ) 57 அரைஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.2964/எ4/2008, நாள்.20.09.2008 சான்றின்படி 01.09.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம்ரூ.9851/–ம் இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வுதியத்திலிருந்து ரூ.3,283/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,12,083/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியான நபர் இல்லை.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் (பிரிவு) வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் டி.சபிதா, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களுக்கு 01.09.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.9,851/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,283/– (ரூபாய் மூவாயிரத்து இருநூற்று எண்பத்தி மூன்று மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,12,083/– (ரூபாய் நான்கு லட்சத்து பன்னிரெண்டாயிரத்து எண்பத்தி மூன்று மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.9,851/– லிருந்து ரூ.6,568/– ஆக குறைத்து வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/35759/2008**
**ஆணையாளர் அவர்களின் 15.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :571/2008 பொருள் எண்.35

**ஒய்வூதியம்**

திரு.ஆர்.விமலன், உதவி வருவாய் அலுவலராக மண்டலம்–6ல் பணிபுரிந்து 30.09.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவர் 34 வருடங்கள் 01 மாதம் 11 நாட்கள் தகுதிப்பணி புரிந்துள்ளதால் ஓய்வூதியமாக ரூ.6,413/– பெற தகுதியுடையவராகின்றார். (01.10.2008 முதல்)

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.வி.ராணி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6,413/–ஐ (50%) 20.09.2015 முடியவும், அதன் பின்னர் 21.09.2015 முதல் ரூ.3,848/– (30%) பெறவும் தகுதியுடையவராகின்றார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்க 29.08.2008 நாளிட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (Class-II) அலுவலரானதால் மன்றத் தீர்மானம் பெற்ற பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.ஆர்.விமலன், ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–6, அவர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.6,413/– வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,11,075/–ல் தணிக்கைத் தடை காரணமாக பிடித்தம் செய்ய வேண்டிய 25 விழுக்காடு தொகை ரூ.77,769/– போக மீதம் ரூ.2,33,306/– வழங்கவும் மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2137/–ஐ தொகுத்து பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,68,237/– வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.6,413/–ல் இருந்து ரூ.4,276/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்கு பின் அன்னாரது மனைவி திருமதி.வி.ராணி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6,413/– 20.09.2015 முடியவும், அதன் பின்னர் ரூ.3,848/–(30%) 21.09.2015 முதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.சு.ந.க.எண்.பி13/28508 /2008**
**ஆணையாளர் அவர்களின் 07.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :572/2008 பொருள் எண்.36

**ஓய்வூதியம்**

டாக்டர் (திரு) கே.கருணாகரன், உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–5, அவர்கள் பணியிலிருந்து 22.10.2007 பிற்பகல் தன்விருப்ப ஓய்வு பெற்றார். தனியர் 24 வருடங்கள் 06 மாதங்கள் 16 நாட்கள் (அ) 49 அரைஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.2437/எ4/2008, நாள்.12.08.2008 சான்றின்படி 23.10.2007 முதல் தன்விருப்ப ஓய்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.8,346/–ம் இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வுதியத்திலிருந்து ரூ.2,782/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,91,595/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.கே.பெண்ணி அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8,346/– ஓய்வூதியருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அல்லது இறப்பிற்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரை, அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.6,131/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் கே.கருணாகரன், உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–5, அவர்களுக்கு 23.10.2007 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.8,346/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,782/– (ரூபாய் இரண்டாயிரத்து ஏழுநூற்று எண்பத்தி இரண்டு மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,91,595/– (ரூபாய் மூன்று லட்சத்து தொன்னூற்று ஓராயிரத்து ஐநூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.8,346/–லிருந்து ரூ.5,564/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.கே.பெண்ணி அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8,346/– ஓய்வூதியருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அல்லது இறப்பிற்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரை, அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.6,131/– நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி13/28823/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 16.10.2008 நாளிட்ட குறிப்பு</u>

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :573/2008 பொருள் எண்.37

**<u>ஓய்வூதியம்</u>**

திரு. ஏ.தாமோதரன், துணை தகவல் தொடர்பு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து 30.06.2000 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். தனியர் 33 வருடங்கள் 01 மாதங்கள் 26 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணைகள், பொ.து.ந.க.எண்.பி13/32442/2000 நாள். 05.09.2000 மற்றும் பொ.து.ந.க.எண்.பி13/55421/2000 நாள். 30.11.2000ன்படி ஓய்வூதியமாக மாதம் ரூ.5238/—மற்றும் பணிக்கொடைத்தொகை ரூ.2,38,524/— மற்றும் தொகுப்புத் தொகை ரூ.2,62,965/— வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.2773/எ4/2008, நாள்.05.09.2008 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் விவரம் பின்வருமாறு:

| | ஓய்வூதிய பயன் |
|---|---|
| ஓய்வூதியம் 01.07.2000 முதல் மாதம் | ரூ.5513/— |
| பணிக்கொடை | ரூ.2,51,048/— |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2205/— |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.3308/— |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,76,772/— |
| குடும்ப ஓய்வூதியம் (மனைவி திருமதி தனபாக்கியம்) | 3308/— |

33 வருடங்கள் 01 மாதங்கள் 26 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.எ. தாமோதரன், 30.06.2000 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற துணை தகவர் தொடர்பு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களுக்கு தனிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.5238/—லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.5513/—ஆக வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,51,048/—ல் (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஓராயிரத்து நாற்பத்தி எட்டு மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட பணிக்கொடைத் தொகை ரூ.2,38,524/—னை நேர்செய்து மீதம் தொகை ரூ.12,524/—யை வழங்கவும், மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2205/—ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,76,772/— (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து ஏழுநூற்று எழுபத்தி இரண்டு மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத் தொகை ரூ.2,62,965/— சரிசெய்து மீதத் தொகை ரூ.13,807/— (ரூபாய் பதிமூவாயிரத்து எண்ணூற்று ஏழு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.5513/—லிருந்து ரூ.3308/— ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.தனபாக்கியம், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.3308/— வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/35672/2008**
**ஆணையாளர் அவர்களின் 21.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :574/2008 பொருள் எண்.38

**ஓய்வூதியம்**

திரு.பி.ஞானவேலு, உதவி கோட்ட மின் பொறியாளர், மின்சாரத்துறை அவர்கள், வயது முதிர்வு காரணமாக 31.05.2008 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். மன்றத் தீர்மான எண்.353/08 நாள்.30.07.2008ன் மூலம் வயது முதிர்வு ஓய்வுபெற அனுமதித்ததிற்கான மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

அன்னாருக்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் சான்றிதழ் எண். நி.மு.எண்.3000/எ4/2008 நாள்.20.09.2008ல் ஓய்வூதியம் 01.06.2008 முதல் ரூ.8888/– பணிக்கொடைத் தொகை ரூ.3,50,000/– ரூ.2962/–யை ஒப்படைப்பு செய்து தொகுப்புத் தொகை ரூ.3,71,791/–ம் வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும், அன்னாரின் மனைவி திருமதி.ஜி.பத்மாவதி அவர்களுக்கு அன்னாரின் காலத்திற்குப்பின் குடும்ப ஓய்வூதியம் 50 விழுக்காடு ரூ.8888/– 31.05.2015 முடியவும், 30 விழுக்காடு ரூ.5333/–யை 01.06.2015 முதலும் வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது.

32 வருடங்கள் 08 மாதங்கள் 16 நாட்கள் தகுதிக் காலம் பணிபுரிந்த அன்னார் 2ம் வகுப்பு அலுவலர் என்பதால் நியமனக்குழு மூலமாக மன்றத் தீர்மானம் பெற்ற பிறகே ஓய்வூதியப் பணப்பயன்கள் வழங்க இயலும் என்பதால், 01.06.2008 முதல் ஓய்வூதியம் ரூ.8888/–யை வழங்கவும், அன்னார் தனது ஓய்வூதியத்தில் 3ல் 1 பகுதி ரூ.2962/–யை ஒப்படைப்புச் செய்து தொகுத்துப் பெற விருப்பம் தெரிவித்துள்ளதால் தொகுப்புத் தொகையாக ரூ.3,71,791/–யை வழங்கவும், அன்னாருக்கு காசோலை வழங்கப்படும் நாளிலிருந்து ஒப்படைப்பு செய்த தொகை ரூ.2962/–யை மாதந்தோறும் 15 ஆண்டுகள் வரை கழித்து ஒப்படைப்புக்குப்பின் ஓய்வூதியம் ரூ.5926/– ஆக குறைத்து வழங்கவும், பணிக்கொடைத் தொகை ரூ.3,50,000/–ல் தணிக்கைத் தடையின் நிமித்தம் 25 விழுக்காடு ரூ.87,500/–யை நிறுத்தி வைத்து மீதம் ரூ.2,62,500/– வழங்கவும், தணிக்கைத் தடை நிவர்த்தி செய்த பின் நிறுத்தி வைக்கப்பட்ட தொகையை மீள வழங்கவும், மேலும் அன்னாரின் மனைவி திருமதி.ஜி.பத்மாவதி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக 50 விழுக்காடு ரூ.8888/–யை 31.05.2015 முடியவும் 30 விழுக்காடு ரூ.5333/–யை 01.06.2015 முதல் வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ4.ந.க.எண்.அ3/2963/2008**

**ஆணையாளர் அவர்களின் 16.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :575/2008 பொருள் எண்.39

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

டாக்டர் திருமதி. அ. தவமணி, அவர்கள் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.சு.து.ந.க.எண்.சி1/13003/94, நாள்.31.03.1995ன்படி மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டு, 19.04.1995 முதல் பணிபுரிந்து வருகிறார்.

இவர் இப்பதவியில் பத்து ஆண்டுகளுக்கு மேல் எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும், நிலுவையில் இல்லாமலும், சம்பளமில்லா விடுப்பு எதுவும் எடுக்காமலும் பணிபுரிந்துள்ளார். மேலும் இவரின் மருத்துவ அலுவலர் பதவியை அரசாணை (ப) எண்.50, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள்.21.05.1999ன்படி பணியை 19.04.1995 முதல் வரன்முறைப்படுத்தியும் மன்றத்தீர்மான எண்.379/99, நாள்.21.05.1999ன்படி 19.04.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் கருதி ஆணை வழங்கப்பட்டுள்ளதால் பத்து ஆண்டு பணிக்கான தேர்வு நிலை ஊதியம் 19.04.2005 முதல் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. இவர் 19.04.2005 அன்று மருத்துவ அலுவலர் பதவியில் சாதாரண நிலை ஊதிய விகிதம் ரூ.8000–275–13500ன்படி ரூ.10750/ஐ அடிப்படை ஊதியமாக பெற்று வருகிறார். இவர் பத்து ஆண்டு பணிமுடித்த விவரம் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | மருத்துவ அலுவலர் பணி நியமன நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த விவரம் | பத்தாண்டு பணி முடித்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. அ.தவமணி மருத்துவ அலுவலர் | 19.04.1995 | ஏதுமில்லை | 18.04.2005 |

| தேர்வு நிலைக்கு தகுதியுடைய நாள் | முந்தைய ஆண்டுகளில் தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | மருத்துவ அலுவலர் பதவியில் 19.04.2005 முதல் தேர்வு நிலைக்கு நிர்ணயம் செய்ய வேண்டிய ஊதிய விகிதம் மற்றும் ஊதியம். |
|---|---|---|---|
| 19.04.2005 | ஏதுமில்லை | ––––– | ரூ.9100–275–14050 ரூ.11025 |

கணக்கு அலுவலர்–4 அவர்கள் தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் 19.04.2005 முதல் தேர்வு நிலைக்கு அனுமதித்து அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ன்படி, 19.04.2005 முதல் ரூ.11025/–ஐ நிர்ணயம் செய்ய கருத்துரு வழங்கியுள்ளார்.

தனியரின் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகிறது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள். 03.09.1982ன்படி, அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, டாக்டர் திருமதி. அ.தவமணி, மருத்துவ அலுவலர் மண்டலம்–4, அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் பத்து ஆண்டுகள் பணி முடித்துள்ளதால் 19.04.2005 முதல் தேர்வு நிலையில் புக அனுமதித்து அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ன்படி, 19.04.2005 முதல் ரூ.11025/–ஐ நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/3290/2008**
**ஆணையாளர் அவர்களின் 29.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :576/2008 பொருள் எண்.40

**தேர்வுநிலை அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. எஸ்.சுரேகா, மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. எஸ்.சுரேகா, மருத்துவ அலுவலராக தொகுப்பூதிய முறையில் 04.01.1995 அன்று பணியமர்த்தப்பட்ட அவர் பின்பு 14.02.1997 முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.474 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந–3) நாள்.26.09.2001ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 15.04.1999 நாள் முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிக்கப்பட்டுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் தனியருக்கு 14.02.2007 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் 9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது விழிப்புக் குழுமத்தில் துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் | பத்தாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 01. | டாக்டர். திருமதி. எஸ்.சுரேகா, | 14.02.1997 | 15.04.1999 | இல்லை | 13.02.2007 பிற்பகல் |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்ட்ட விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 07 | 08 | 09 | 10 |
| ஏதுமில்லை | – – – | ஆம் | 14.02.2007 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. எஸ்.சுரேகா, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 13.02.2007 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 14.02.2007 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வுநிலை காலமுறை சம்பளமான ரூ. 9100–275–14050ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ2. சு.து.ந.க.எண்.அ1/2574/2006**
**ஆணையாளர் அவர்களின் 29.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :577/2008 பொருள் எண்.41

**கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாமைக்காக அரசின் தளர்வாணைபெற அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–2ல் பணிபுரிந்த டாக்டர் எஸ்.நீலாவதி, மருத்துவ அலுவலர், அவர்கள் 31.03.2006 தேதியிட்ட செயல்முறை ஆணை எண். சு.து.ந.க.எண்.சி1/2096/2008ன்படி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு 31.03.2006 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார்.

தனியர் சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் உதவி அறுவையாளராக 17.11.1975 அன்று வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணியில் அமர்த்தப்பட்டார், இவருக்கு 29.05.1979 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு 27.06.1981 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டது.

தனியர் மீது துறை பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததாலும், சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை ஏதும் இல்லை என்பதாலும் விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் இல்லை என்பதாலும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு 31.03.2006 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார்.

தனியருக்கு ஓய்வூதியம் வழங்க உள்ளாட்சி நிதித் தணிக்கையினருக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதில் தனியர் செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1969ன்படி மருத்துவ அலுவலர் செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற விதி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

தனியர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை இந்நிகழ்விற்கு அரசின் தளர்வாணை பெறப்பட்ட பின்னரே தனியருக்கு முழு ஓய்வூதிய பலன்கள் வழங்க இயலும் மேலும் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி சுகாதாரத் துறையின் கீழ் பணியிலமர்த்தப்படும் மருத்துவ அலுவலர்கள் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறத் தேவையில்லை.

எனவே, சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–2ல் பணிபுரிந்த டாக்டர் எஸ்.நீலாவதி, மருத்துவ அலுவலர், ஓய்வு நாள்.31.03.2006 அவர்கள் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்த நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், தனியர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறாததால் அரசின் தளர்வாணை பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பிடவும் நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.2.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ4. வ.து.ந.க.எண்.அ1/271/2008**
**ஆணையாளர் அவர்களின் 17.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :578/2008 பொருள் எண்.42

**கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று**

மண்டலம்–4ல் பணிபுரியும் திருமதி. பி.கே.விஜயா, உதவி செயற்பொறியாளர், அவர்கள் அமெரிக்காவில் தன்னுடைய உறவினர் இருப்பதால் அமெரிக்கா செல்ல கடவுச்சீட்டு பெற மனு செய்ய உள்ளதால் தடையின்மை சான்று வழங்க கோரியுள்ளார்.

இதனை தொடர்ந்து தெரிவிப்பது, மேற்காணும் உதவி செயற்பொறியாளர், அமெரிக்கா செல்ல தனக்கு தகுதியுள்ள விடுப்பு வேண்டி சமர்ப்பிப்பதாகவும் அமெரிக்கா செல்லும் முழு பயணச்செலவினங்கள் தன்னுடைய மைத்துனர் ஏற்று கொள்வதாக தெரிவித்துள்ளார். தனியர் சுமார் 15 ஆண்டு காலமாக சென்னை மாநகராட்சியில் பணியாற்றி வருகிறார். இவர் மீது இதுநாள் வரையில் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் துறை சார்ந்த நடவடிக்கைகள் ஏதும் இல்லை. மேலும் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என விழிப்பு அலுவலர் அவர்களால் அளிக்கப்பட்ட சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர், Security Branch. CID அவர்கள் வழங்கியுள்ள கடிதத்தில் தங்கள் துறையிலும் திருமதி.பி.கே.விஜயா, உதவி செயற்பொறியாளர், அவர்களுக்கு எதிரான விசாரணைகள் இல்லையெனவும் கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்றிதழ் வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையில்லா சான்று வழங்கும் பொருட்டு கீழ்கண்ட விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது.

1. அயல்நாட்டில் எந்தவித வேலை வாய்ப்பு அல்லது வேலை வாய்ப்புக்கு தேவையான பயிற்சிகளோ இவ்வலுவலக உத்தரவின்றி பெறக்கூடாது.
2. அயல்நாடு செல்லும் செலவும் அதன்பொருட்டு ஏற்படும் செலவுகளும் மற்ற செலவு இனங்களுக்கு இவ்வலுவலகம் பொறுப்பல்ல.
3. அயல்நாட்டில் இருந்து திடீர் என ராஜினாமா செய்யும் எண்ணத்துடனும் மற்றும் ராஜினாமா செய்வதாக கோரும் கடிதமும் எக்காரணத்தை கொண்டும் இவ்வலுவலக நடைமுறைகளின்படி ஏற்கதக்கதல்ல.
4. அயல்நாடு பயணத்தின் போது எந்தவிதமான வியாபாரம் செய்வதற்கான முயற்சி எடுப்பதோ அல்லது தேடுதலோ செய்யக்கூடாது.
5. அயல்நாடு செல்லும் முன் தேவையான விடுப்பு முழுமையாக பெற்று கொண்டு அதற்குரிய முன் அனுமதி பெற்ற பின்புதான் அயல்நாடு செல்லவேண்டும் விடுப்பினை நீட்டித்தல் கூடாது.
6. தான் பெற்ற கடவுச்சீட்டு மேலும் வேறு சில நாடுகளுக்கு செல்ல முறையான அலுவலக உத்தரவு பெற்றிருக்க வேண்டும். கடவுச்சீட்டு விண்ணப்பிக்க வழங்கிய தடையின்மை சான்றிதழ்படியே அதை உபயோகப்படுத்த வேண்டும்.
7. தடையின்மை சான்றிதழின் ஆயுள்காலம் அதன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லதக்கவையாகும்.
8. அயல்நாடு செல்லும் முன் பெற்ற விடுப்புக்கான உத்தரவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் புறப்படும் தேதி, திரும்ப நாடு வந்து சேரும் நாள் ஆகியவை தெரியப்படுத்தப்பட வேண்டும்.
9. அரசாணையில் தெரிவிக்கப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்யப்பட்டு புகைப்படம் ஒட்டி கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, திருமதி திருமதி.பி.கே.விஜயா, உதவி செயற்பொறியாளர், மண்டலம்–4, அவர்கள் அமெரிக்கா செல்வதற்காக மேற்குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.1.ந.க.எண்.அ2/1226 /2008**

**ஆணையாளர் அவர்களின் 15.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :579/2008 பொருள் எண்.43

**கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–1ல் செயற்பொறியாளராக பணிபுரியும் (மாற்றுப்பணியிடம் திடக்கழிவு மேலாண்மைத்துறை) திரு.எஸ்.மோகன்ராஜ், என்பவர் தனது மகனுக்கு ஜுன் 2008ல் இலங்கையில் நடைபெறவுள்ள திருமணத்திற்கு செல்ல இருப்பதாகவும், அதற்கு கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மைச் சான்றிதழ் விண்ணப்பித்தமைக்கு முழு கோப்பு உரிய விவரங்களுடன் ஆணையாளர் அவர்களுக்கு மண்டல அலுவலர்–5 அவர்களால் பொதுத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இக்கோப்பில் சில விவரங்கள் வேண்டி மண்டல அலுவலகம்–5க்கு திருப்பப்பட்டது.

தற்போது, ஆணையாளர் அவர்களின் பொ.து.ந.க.எண்.ஈ1/5093/2007, 20.03.2008 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியர் மண்டலம்–1ற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து முழு கோப்பும் மண்டலம்–1ல் பெறப்பட்டது.

இதற்கிடையில் செயற்பொறியாளர் திரு.எஸ்.மோகன்ராஜ், என்பவரின் மகனின் இலங்கையில் ஜுன் 2008ல் நடைபெறவிருந்த திருமணம் டிசம்பர் 2008ல் தள்ளி வைக்கப்பட்டதாக தனியரால் தெரிவிக்கப்பட்டு அதற்காக கீழ்கண்ட ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

1. திரு.பி.டி.ஆர். ராஜன், இலங்கை (தனியரின் சம்மந்தி) அவர்களின் 11.06.2008 நாளிட்ட கடிதம்.
2. திருமண அழைப்பிதழ்

இந்நிகழ்வு தொடர்பாக, இதர விவரங்கள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

தனியர் தனது 22.07.2008 நாளிட்ட கடிதத்தில் டிசம்பர் 2008ல் இலங்கையில் நடைபெறவிருக்கும் தனது மகன் திருமணத்திற்கு செல்ல வேண்டி இருப்பதால், அதற்காக கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மைச் சான்று அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 02.01.1979 முற்பகல் முதல் கட்டிட வரைபட ஆய்வாளராக (உதவி பொறியாளர்) பணியமர்த்தப்பட்டு பின்பு உதவி செயற்பொறியாளராக 16.04.1993 முதல் பதவு உயர்வு பெற்றும், 07.07.2000 முதல் செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றும், தற்போது மண்டலம்–1ல் (பணிமாற்று அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மைத்துறையில்) செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். இவரது பணி உதவி பொறயிாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டும், தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டும் உள்ளது. இவர் 01.05.2011 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். இந்நிகழ்வில் தனியர் மீது சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என விழிப்பு அலுவலர் மற்றும் விழிப்புத்துறையில் (D.V.A.C) பாதுகாப்பு பிரிவு காவல் துறையிலும் (SB-CID) தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதுமில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தனியர் 22.07.2008 நாளிட்ட கடிதத்தில், தான் இலங்கைக்கு 05.12.2008 அன்று செல்லவிருப்பதாகவும், இலங்கைக்கு சென்று வர மற்றும் இதர செலவினங்களை தானே ஏற்றுக்கொள்வதாக திரு.பி.டி.ஆர்.ராஜன், இலங்கை (தனியரின் சம்மந்தி) என்பவர் தனது 11.06.2008 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

அரசு பணியாளர்கள் அயல்நாடு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு கடைப் பிடித்தொழுகும் நிபந்தனைகள் அடிப்படையில் தனியருக்கு வெளிநாடு செல்வதற்கு கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மைச் சான்று கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

01. வெளிநாடு செல்ல இருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்பொழுது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்துகொள்ளக்கூடாது.
02. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணிநியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்மந்தப்பட்ட வேலைகளில் ஈடுபட கூடாது.
03. வெளிநாடு செல்லும் பயணச்செலவு உட்பட எந்தவிதமான செலவினங்களையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.

<u>ம.அ.1.ந.க.எண்.அ2/1226 /2008</u>

04. இவர் வெளிநாட்டில் இருக்கும்போது சென்னை மாநகராட்சியில் பணியினை துறக்க விண்ணப்பிக்கக்கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.

05. வெளிநாடு செல்வதற்கு முன் தனியருக்கு தகுதியுள்ள விடுப்புகள் துய்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்து அவ்விடுப்பு அனுமதி அளித்த பிறகே அவர் வெளிநாடு செல்ல வேண்டும்.

06. வழங்கப்படும் தடையின்மைச் சான்று மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்றி மீண்டும் வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் திரு.எஸ்.மோகன்ராஜ், செயற்பொறியாளர், மண்டலம்–1 (மாற்றுப்பணியிடம் திடக்கழிவு மேலாண்மைத்துறை) என்பவருக்கு இலங்கை செல்ல கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மைச் சான்று வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மி.து.ந.க.எண்.மே1/அ1/8266/96

ஆணையாளர் அவர்களின் 20.10.2008 நாளிட்ட குறிப்பு

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :580/2008 பொருள் எண்.44

**கம்பியில்லா தொடர் அமைப்பு பணியாளர்களின் பணிவரன்முறைபடுத்துதல்**

29.02.2008 நாளிட்ட (மன்றத்தீர்மான எண்.86/2008) மன்றத் தீர்மானத்தில் அரசின் பின்னேற்பு ஆணையினை எதிர்நோக்கி சென்னை மாநகராட்சியில் மின் துறையில் காலியாக உள்ள 15 இளநிலை / உதவி பொறியாளர்கள் பணியிடங்களில், கம்பியில்லா தொடர் அமைப்பில் பணிபுரிந்த 2 உதவி பொறியாளர்கள் 1) திரு. எஸ். சிங்காரவேலு, 2) திரு. என். சிவபதி ஆகியோரை உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவியிலும் 5 காலி இளநிலை பொறியாளர்கள் பணியிடங்களின் தரத்தினை தொழில் நுட்ப உதவியாளர்கள் என குறைத்து ஏற்படும் இந்த ஐந்து காலி பணியிடங்களில் கம்பியில்லா தொடர் அமைப்பில் பணிபுரியும் ஐந்து தொழில் நுட்ப உதவியாளர்களை 1) திரு. பி. ஆர். சியாம்சுந்தர் 2) திரு. டி. வெங்கடேசன், 3) திரு. ஜி. செந்தில்குமார், 4) திரு. டிவி. வெங்கட்டராகவன் 5) திரு. வி. முத்து குமார் ஆகியோரை முறையான பணியில் ஈர்த்துக்கொள்ளவும் (absorbed) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

காலமுறை ஊதியத்தில் பணியமர்வு செய்த 8 நபர்களில் உள்ள திரு. டி. ஆர்.சரவணபாண்டி (பட்டயபடிப்பு) பெயரை நீக்கம் செய்து தற்போது பணியில் உள்ள இந்த 7 பொறியாளர்கள் கம்பியில்லா தொடரமைப்பு பிரிவில் 22.08.1996 முதல் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக காலமுறையிலான ஊதிய விகிதத்தில் தொடர்ந்து பணிபுரிந்து வருவதால், இந்த ஏழு பொறியாளர்களின் நியமனங்களையும் வரன்முறை செய்யலாம் என்று 29.02.2008 நாளிட்ட மன்ற தீர்மான எண்.86/2008ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பத்தி எண்.6ல் அதன் அமலாக்க நாள் இடம் பெறவில்லை என்பதால் தற்போது அதனையும் தீர்மானிக்க வேண்டிய நிலை உள்ளது.

மன்றத்தீர்மான எண்.389/2006, 31.08.2006ன்படி மின்துறையில் உள்ள 1981 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட சென்னை மாநகராட்சி 3ம் மற்றும் 4ம் நிலை பொறியியல் சார்நிலை பணியாளர்கள் பணியமர்விற்கான தற்காலிக வரைவு பணியமர்வு விதிகளின் அடிப்படையில் மேற்கண்ட 7 நபர்களின் பணி நியமனம் வருகிறது.

2 உதவி பொறியாளர்களான 1) திரு. எஸ். சிங்காரவேலு 2) என். சிவபதி, ஆகியோருக்கு 22.08.1996 முதல் காலமுறை ஊதிய விகிதமான 2000–60–2300–75–3200–100.3500, 5வது ஊதியக்குழு (தற்போது காலமுறை ஊதிய விகிதமான 6500–200–11100 (6வது ஊதியக்குழு) என்ற ஊதிய அடிப்படையிலும் மற்றும் 5 தொழில் நுட்ப உதவியாளர்களான 1) திரு. பி. ஆர். சியாம்சுந்தர் 2) திரு. டி. வெங்கடேசன், 3) திரு. ஜி. செந்தில்குமார், 4) திரு. டிவி. வெங்கட்டராகவன் 5) திரு. வி. முத்து குமார் ஆகியோருக்கு 22.08.1996 முதல் காலமுறை ஊதிய விகிதமான 1400–40–1600–50–2300–60–2600, 5ஆவது ஊதியக்குழு (தற்போது காலமுறை ஊதிய விகிதமான 5000–150–8000) (6வது ஊதியக்குழு) என்ற ஊதிய அடிப்படையிலும் மேற்கண்ட நபர்களை பணியில் நியமிக்கப்பட்டதற்கு 10.9.1998 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண்.180, ந.நி.ம.கு..வ (மா.ந.3) துறை மூலம் பின்னேற்பு ஆணை பெறப்பட்டது.

எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்திற்கொண்டு கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழுவின் மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ) கம்பியில்லா தொடர் அமைப்பில் உதவி பொறியாளர்களாக 22.08.1996 முதல் (6வது ஊதியக்குழுவின்படி ஊதிய விகிதம் 6500–200–11100) பணிபுரிந்து பின்னர் முறையான பணியிடத்தில் உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவியில் ஈர்த்துக் கொள்ளப்பட்டுள்ள திருவாளர்கள் திரு. எஸ். சிங்காரவேலு திரு.என். சிவபதி, ஆகியோருக்கு 22.08.1996 முதல் பணிவரன்முறை செய்யவும்,

ஆ) கம்பியில்லா தொடர் அமைப்பில் பட்டயபடிப்பு தொழில்நுட்ப உதவியாளர்களாக 22.08.1996 முதல் (6வது ஊதியக்குழுவின்படி ஊதிய விகிதம் 5000–150–8000) பணிபுரிந்து பின்னர் முறையான பணியிடங்களில் தொழில்நுட்ப உதவியாளராக (மின்சாரம்) ஈர்த்துக் கொள்ளப்பட்டுள்ள திரு. பி. ஆர். சியாம்சுந்தர் 2) திரு. டி. வெங்கடேசன், 3) திரு. ஜி. செந்தில்குமார், 4) திரு. டிவி. வெங்கட்டராகவன் 5) திரு. வி. முத்து குமார் ஆகியோருக்கு 22.08.1996 முதல் பணி வரன்முறை செய்யவும்,

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.5.ந.க.எண்.எச்1/1447 /2000**
**ஆணையாளர் அவர்களின் 07.08.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :581/2008 பொருள் எண்.45

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.கே.ராஜகோபால், மலேரியா பணியாளர், என்பவர் மண்டலம்–5, இறப்புநாள்.01.04.2004 பணிக்காலத்தில் 19.09.1992 முதல் 24.02.1993 வரை பணிக்கு வரவில்லை. இது குறித்து அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு மருத்துவக் குழுவின் அறிக்கை பெற்று 25.03.1993 அன்று பணிக்குச் சேர அனுமதிக்கப்பட்டு அக்காலத்தை காசநோய் விடுப்பாக மண்டல அளவில் முறைப்படுத்தப்பட்டது.

தனியர் மீண்டும் 08.09.1993 முதல் தொடர்ந்து பணிக்கு வராததால் இவ்விரு நிகழ்வுகள் குறித்து தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தி விளக்கம் கோரப்பட்டது.

1. நீங்கள் கடந்த 19.09.1992 முதல் 24.02.1993 வரை தகவலின்றி பணிக்கு வரவில்லை.
2. நீங்கள் 08.09.1993 முதல் இந்நாள் வரை தொடர்ந்து தகவலின்படி பணிக்கு வராதவராக உள்ளீர் மற்றும்
3. 19.09.1992 முதல் தகவலின்றி பணிக்கு வராத காரணத்திற்காக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும், தகவலின்றி பணிக்கு வராத பழக்கத்தை கொண்டுள்ளீர் இதன் மூலம் பணியின் மீது அக்கறையின்மையும், ஒழுங்கினமாகவும் நடந்துள்ளீர்.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை 09.09.2004 அன்று அன்னாரின் வீட்டு விலாசத்திற்கு அனுப்பியதில் ஆள் இல்லாமல் திருப்பப்பட்டது. மேலும் உள்விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தி குறிப்பாணை 26.04.2005 அன்று இறுதியாக இருந்த வீட்டு விலாசத்திற்கு அனுப்பப்பட்டும் ஆஜராகாததால் ஆளில்லா விசாரணை நடத்தி அறிக்கை பெற கோப்பு நடவடிக்கையில் இருந்த போது மேற்கண்ட பணியாளரின் மனைவி திருமதி. சாந்தி, அவர்கள் தனது கணவர் 19.09.1992 முதல் புத்தி சுவாதீனமில்லாமல் எங்கோ சென்று விட்டார் எனவும், பின்னர் 2004 மார்ச் மாதம் திரும்ப வீட்டிற்கு வந்ததாகவும் அதன் பிறகு உடல்நலம் பாதிக்கப்பட்டு 01.04.2004 அன்று காலமானதாகவும், தனக்கு எழுத படிக்க தெரியாத காரணத்தால் அலுவலகத்திற்கு விவரம் தெரியப்படுத்தவில்லை என்றும், தனது கணவரின் இறப்பின் காரணமாக தனக்கு ஓய்வூதிய பலன்கள் வழங்கும்படியும் கேட்டு கொண்டு 04.01.2006 அன்று கடிதம் சமர்ப்பித்தார்.

இதனடிப்படையில், மேற்படி தனியர் பணிக்காலத்தில் 19.09.1992 முதல் 24.02.1993 வரை மற்றும் 08.09.1993 முதல் இறப்பு நாளான 01.04.2004 வரை பணிக்கு வராதது குறித்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை அரசாணை எண்.230 ப (ம) நி.சீ.து. நாள்.07.04.1988ன்படி கைவிட ஆணையாளர் அவர்களின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டு 17.05.2006 நாளிட்ட ஆணை பெறப்பட்டது.

இதற்கிடையில் தனியர் 19.09.1992 முதல் 24.02.1993 வரை பணிக்கு வராத காலத்தை காசநோய் விடுப்பாக மண்டல அளவில் வரண்முறைப்படுத்தியரை ரத்து செய்து மண்டல அலுவலர் –5 அவர்களின் 25.06.2007 நாளிட்டசெயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஆணையாளரின் ஆணைப்படி தனியர் பணிக்கு வராத காலமான 19.09.1992 முதல் 24.02.1993 வரை மற்றும் 08.09.1993 முதல் இறப்பு நாளான 01.04.2004 வரை பணிக்கு வராதது குறித்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை கைவிடப்பட்டு ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை நாள் 12.05.2008ன்படி வழங்கப்பட்டது.

மேற்படி ஆணையின் நகலினை திருமதி.சாந்தி, அவர்களிடம் 12.06.2008 அன்று சார்பு செய்து ஒப்புகை பெறப்பட்டது. மேலும் தனியர் பணிக்கு வராத காலம் ஓராண்டினைக் கடந்துள்ளதால் அக்காலத்தை அரசின் தளர்வாணை பெற்ற பின்னரே வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, திரு.கே.ராஜகோபால், மலேரியா பணியாளர், மண்டல அலுவலகம்–5, இறப்பு நாள்.01.04.2004 அவர்கள் பணிக்காலத்தில் ஓராண்டுக்கு மேல் பணிக்கு வராத காலமான 08.09.1993 முதல் இறப்பு நாளான 01.04.2004 வரையிலான காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசின் அனுமதி பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.9.ந.க.எண்.அ6/4172/04**
**ஆணையாளர் அவர்களின் 20.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :582/2008 பொருள் எண்.46

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, பகுதி–26, கோட்டம்–138ல் பணியமைப்பு பிரிவில் நான்காம் நிலையைச் சார்ந்த திருமதி.பி.தனலட்சுமி, அவர்கள் 05.06.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை குறித்து 30.06.2004 நாளிட்ட அலுவலக குறிப்பாணை வாயிலாக உரிய விளக்கம் கோரியும் விளக்கம் சமர்ப்பிக்காததால் தனியர் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி எண்.9(1)ன் கீழ் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தி விளக்கம் கோரப்பட்டது. தனியர் விளக்கம் சமர்பிக்கவில்லை.

எனவே, அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நீலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விலக்கி கொண்டு துணைவிதி 9(2)ன்கீழ் கீழ்காணும் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு 16.09.2004 நாளிட்ட குற்றக் குறிப்பாணை வாயிலாக விளக்கம் கோரப்பட்டது.

1. 05.06.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2. முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் குறிப்பாணை அனுப்பப்பட்டு விளக்கம் கேட்டதற்கு இதுநாள் வரை விளக்கம் அனுப்பி வைக்கப்படவில்லை.
3. விடுப்பு கடிதமோ முன் அனுமதியோ பெறவில்லை.
4. அடிக்கடி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்து சாலைப்பணியில் பாதிப்பு ஏற்படக் காரணமாக இருந்தது.
5. துணை விதி 9(1)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு குறிப்பாணை வழங்கியதற்கு பதில் அளிக்கவில்லை.

மேற்படி குற்றச்சாட்டுக் குறிப்பாணையை தனியர் பெற்றுக்கொண்டு 01.03.2005 அன்று விளக்கக் கடிதம் அளித்துள்ளார். அதில் தனது குடும்பம் கஷ்டமான சூழ்நிலையில் உள்ளதால் தன்னை பணிக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொணடுள்ளார். தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டு தனியர் பணியில் 09.06.2005 முதல் சேர்த்துக்கொள்ளப்பட்டார். தனியர் மீதான குற்றச்சாட்டுகள் மீது விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை அலுவலரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை அலுவலர் தனது 29.04.2005 நாளிட்ட விசாரணை அறிக்கையில் தனியர் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நிரூபணமாகிறது என அறிக்கை சமர்பிக்கப்பட்டது.

திருமதி.பி.தனலட்சுமி, சாலைபணியாளர், மண்டலம்.9, என்பவர் 05.06.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் தனியர் மீது மேற்கொள்ளப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக அன்னாரது ஊதிய உயர்வை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 15.09.2006 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

மேலும், 01.08.1984 அன்று பணி நிரந்தரம் செய்யப்பட்டு 5 ஆண்டுகள் கடந்து உள்ள நிலையில் தனியர் பணிக்கு வராத காலங்களான 05.06.2004 முதல் 08.06.2005 வரையிலான காலம் ஓராண்டுக்கு மிகைப்படுவதால் அடிப்படை விதி 18(2)ன் மீது அரசின் தளர்வாணை பெற்றப்பின்னர் வரன்முறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, திருமதி. .பி.தனலட்சுமி, சாலைபணியாளர், மண்டலம்.9, என்பவர் 05.06.2004 முதல் 08.06.2005 வரை பணிக்கு வராத ஓர் ஆண்டுக்கு மிகையான காலத்தினை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்தி உரிய அரசாணை பெற அரசுக்கு முன்மொழிவு அனுப்பிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ.9.ந.க.எண்.அ6/3116/2004</u>
<u>ஆணையாளர் அவர்களின் 23.09.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :583/2008 பொருள் எண்.47

<u>பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்</u>

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, பகுதி–25ஐச் சார்ந்த நிரந்த பூங்கா பணியாளர் (பணி எண்.706577) திரு.பி.பால்ராஜ், என்பவர் 16.03.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை குறித்து அலுவலக குறிப்பாணை எண்.506/04, 30.03.2004 நாளிட்டது பணியாளருக்கு 13.05.04 அன்று சார்வு செய்யப்பட்டது. அதற்கு பணியாளர் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. எனவே துணை விதி 9(1)ன்கீழ் 18.06.2004 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை 03.07.2004 அன்று சார்வு செய்யப்பட்டது. தனியர் விளக்கம் அளிக்காததால் அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி எண்.9(2)ன் கீழ் 03.08.2004 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வாயிலாக பின்வரும் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

1. 16.03.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2. முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் குறிப்பாணை அனுப்பப்பட்டு விளக்கம் கேட்டதற்கு இதுநாள் வரை விளக்கம் சமர்ப்பிக்கவில்லை.
3. விடுப்பு கடிதமோ முன் அனுமதியோ பெறவில்லை.
4. பூங்கா பணி பாதிப்பு ஏற்படக் காரணமாய் இருந்தது.
5. 03.07.2004 அன்று சார்வு செய்யப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு இதுநாள் வரை விளக்கம் சமர்ப்பிக்கப்படவில்லை.

தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணை 23.08.2004 அன்று பெற்றுக்கொண்டு எவ்வித விளக்கமும் அளிக்காததால் தனியர் மீது நேர்முக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தனியர் 12.10.2004 நாளிட்ட விளக்க கடிதத்தில் 16.03.2004 முதல் தான் மஞ்சள் காமாலை நோயினால் அவஸ்தைப்பட்டு தன் சொந்த ஊரான நந்தியாலா கிராமத்தில் தங்கி சிகிச்சை பெற்று வந்ததாகவும் தனக்கு உதவி செய்ய யாரும் இல்லாததாலும், தனக்கு எழுதப் படிக்கத் தெரியாததாலும், தனது ஊரில் யாருக்கும் தமிழ் தெரியாததாலும் தன்னால் விடுப்பு கடிதமோ, விளக்கமோ அளிக்க முடியவில்லை. மேலும், எந்தவித கெட்ட எண்ணத்துடன் பணிக்கு வராமல் இருக்கவில்லை. எனவே, மன்னித்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற மீண்டும் பணிதருமாறு கோரியுள்ளார்.

தனியர் மீது நேர்முக விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அலுவலர் அவர்களின் 17.01.2005 நாளிட்ட அறிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார். மேலும் பணியாளருக்கு நேர்முக விசாரணை அறிக்கை நகல் சார்வு செய்யப்பட்டு பணியாளர் கீழ்கண்டவாறு விளக்கம் அளித்தார்.

<u>பணியாளரின் கூடுதல் விளக்கம்</u>

1. தான் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்ட 16.03.2004 முதல் மிகவும் அதிகமானதால் பணிக்கு வரவில்லை என்றும், தனது சொந்த ஊரான ஆந்திரா மாநிலம் நந்தியாலாவிற்கு சென்று நாட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டதால் குறித்த காலத்தில் குறிப்பாணை பெற்று விளக்கம் அளிக்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

2, 3) தன் சொந்த ஊரான ஆந்திராவிற்கு சென்று சிகிச்சை மேற்கொண்டதால் முன் கூட்டியே தகவல் ஏதும் அளிக்க இயலவில்லை என்றும் தனக்கு உதவி புரிய யாரும் கிடையாது ஆகையால் தான் விடுப்புக் கடிதம் கொடுக்கவில்லை என்றும் முன்னரே அனுமதி வேண்டி தெரிவிக்க இயலவில்லை என்றும் தன்னை மன்னித்து குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்க கேட்டுக்கொண்டார்.

4, 5) தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமல் போனதால் பணிக்கு வரவில்லை என்றும் வேண்டுமென்றே பணிக்கு வராமல் தான் ஒருபோதும் இருந்தது கிடையாது என்றும் தான் இதற்கு 12.10.2004 அன்று விளக்கம் அளித்து விட்டேன் என்றும் தெரிவித்து தன் மீது கருணை கொண்டு குற்றத்தை மன்னித்து தன்னை விடுவிக்க கேட்டுக்கொண்டார்.

**ம.அ.9.ந.க.எண்.அ6/3116/2004**

தனியரின் கூடுதல் விளக்கத்தினை தொடர்ந்து தனியரை மீண்டும் பணியில் அமர்த்தவும், பணிக்கு வராத காலங்கள் ஓர் ஆண்டுக்கு மேல் உளளதால் தளர்வாணை பெற அரசின் அனுமதி பெறவும் தனியருக்கு ஆண்டு ஊதிய உயர்வை 3 ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்கவும் ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி பணியாளர் மீண்டும் 04.05.2005 அன்று பணியில் சேர்ந்தார். திரு.பி.பால்ராஜ், பூங்கா பணியாளர், பகுதி–25, மண்டலம்–9, அவர்கள் 16.03.2004 முதல் 03.05.2005 வரை பணிக்கு வராத ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட காலத்தை வரன்முறைப்படுத்திட அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்தி அரசின் அரசாணை பெற வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்பிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.9.ந.க.எண்.அ6/0017/2005**
**ஆணையாளர் அவர்களின் 25.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :584/2008 பொருள் எண்.48

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, பகுதி–27, கோட்டம்–141ஐ சாா்ந்த நிரந்தர துப்புரவு பணியாளர் திருமதி.எஸ்.மஸ்தானம்மா, பணி எண்.732844 அவர்கள் 08.04.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை குறித்து 09.09.2003 நாளிட்ட அலுவலக குறிப்பாணை வாயிலாக விளக்கம் கோரப்பட்டது. அதனை பெற்றுக்கொண்டு பணியாளர் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி எண்.9(2)ன் கீழ் பின்வரும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு 27.09.2005 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வாயிலாக விளக்கம் கோரப்பட்டது.

1. 08.04.2003 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி தன்னிச்சையாக பணிக்கு வரவில்லை.
2. 08.04.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத செயலுக்கு உரிய விளக்கம் சமா்ப்பிக்கக்கோரி அலுவலக குறிப்பாணை மற்றும் நினைவூட்டுக் குறிப்பாணை ஆகியவற்றை பெற்றுக்கொண்டு எவ்வித விளக்கமும் சமா்ப்பிக்காதது.
3. மேற்கண்ட செயல்மூலம் கோட்டம்–141ன் துப்புரவுப் பணியில் பாதிப்பு ஏற்படக் காரணமாக இருந்தது.
4. மேற்கண்ட முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத செயல்மூலம் தங்களது பணியின் பால் அக்கறையின்றியும், பொறுப்புணா்வு மற்றும் கடமை உணா்வின்றியும் அலட்சியப்போக்குடன் செய்யப்பட்டுள்ளதால் பணியாளர் நடத்தை விதி 20 சி–ஐ மீறியுள்ளீா்கள்.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணை தனியா் பெற்றுக்கொண்டு எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

எனவே, தனியா் 08.04.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக அவா் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையினை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அலுவலரின் 13.06.2006 நாளிட்ட அறிக்கை பெறப்பட்டது. விசாரணை அறிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகியுள்ளது என்று விசாரணை அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ளாா்.

விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை நகல் மற்றும் குறிப்பாணையுடன் தனியருக்கு வழங்கி கூடுதல் விளக்கம் கோரப்பட்டது. அதனை 11.08.2006 அன்று பெற்றுக்கொண்டு பணியாளர் 20.08.2006 நாளிட்ட விளக்கத்தில் தான் நெஞ்சுவலியில் பாதிக்கப்பட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் அதனால் பணிக்கு வர இயலவில்லை என்றும் மற்றபடி தான் வேண்டுமென்றே முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். என்றும் தனக்கு எழுத படிக்க தெரியாததால் விடுப்பு கடிதம் கொடுக்க இயலவில்லை என்று தெரிவித்து தன்னை மன்னித்து மீண்டும் பணியில் அமா்த்த வேண்டியதன் அடிப்படையில், ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீள பணியில் சேர அனுமதிக்கப்பட்டு 08.07.2006 மீண்டும் பணியில் சோ்ந்துள்ளாா். அன்னாா் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவாக ஆணையா் அவா்களின் 13.01.2007 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியரின் வருடாந்திர ஊதிய உயா்வு மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து உத்திரவு வழங்கப்பட்டது. மேலும், தனியா் பணிக்கு வராத காலங்கள் ஓராண்டிற்கு மேற்பட்டதால் வரன்முறைப்படுத்திட அடிப்படை விதி 18(2)னை தளா்வு செய்ய அரசுக்கு முன்மொழிவு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று உரிய அரசாணை பெற்ற பின்னா் வரன்முறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, திருமதி.எஸ்.மஸ்தானம்மா, நிரந்தர துப்புரவு பணியாளர், பணி எண்.732844, கோட்டம்–141, பகுதி–27, மண்டலம்–9, என்பவா் 08.04.2003 முதல் 07.07.2006 வரை பணிக்கு வராத காலங்களை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளா்த்த அரசின் தளா்வாணை பெற வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்பிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பாிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமா்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :585/2008 பொருள் எண்.49

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.ஆர்.பவுல், இரவு துப்புரவு பணி ரீச்–15, பகுதி–9, மண்டலம்–3, அவர்கள் கடந்த 02.05.1998 முதல் பணிக்கு வராமையால் விளக்கம் கேட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. இவர் தனது 24.06.1998 நாளிட்ட கடிதத்தில் குடும்ப விஷயமாக ஆந்திராவிற்கு சென்றதாகவும் சென்ற இடத்தில் மஞ்சள் காமாலை நோயால் அவதிப்பட்டதாகவும் தற்சமயம் குணமடைந்துவிட்டபடியால் மன்னித்து மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டு கொண்டார். உதவி செயற்பொறியாளர், பகுதி–9, மண்டலம்–3, அவர்கள் மீண்டும் பணியில் சேர அனுமதித்தும் மேற்படி பணியாளர் பணியில் சேரவில்லை. எனவே, உதவி செயற்பொறியாளர், பகுதி–9, மண்டலம்–3, அவர்கள் தனது 03.08.1998 நாளிட்ட குறிப்பாணையில் மீண்டும் விளக்கம் கேட்டுள்ளார். மேற்படி பணியாளர் 24.08.1998 நாளிட்ட கடிதத்தில் தான் 02.05.1998 முதல் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு பல ஊர்களில் வைத்தியம் பார்த்து குணமாகாத நிலையில் தாயாரின் உடல்நிலை கவலைகிடமாக இருந்ததால் மீண்டும் ஆந்திராவிற்கு சென்றதால் அங்கு தான் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்ட நிலையில் தனது தாயாரும் காலமாகி விட்ட படியால் தாயாரின் ஈமச்சடங்கு முடித்துக் கொண்டு தனது நோயை குணப்படுத்திக் கொண்டதாகவும் தன்னை மன்னித்து மீண்டும் பணியில் அமர்த்துமாறு கேட்டுக்கொண்டார்.

எனவே, இப்பணியாளர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு–3 மற்றும் 4 பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 9(1)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

**குற்றச்சாட்டு எண்.1** திரு.ஆர்.பவுல், இரவு துப்புரவு ரீச்–15, 02.05.1998 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரத் தவறியது.

**குற்றச்சாட்டு எண்.2** எவ்வித முன்னறிவிப்பின்றி 02.05.1998 முதல் தொடர்ந்து பணிக்கு வராத தவறியதால் அன்றாட துப்புரவு பணிக்கு பாதிப்பு ஏற்படுத்தியது.

பணியாளர் தனது 04.12.1998 நாளிட்ட விளக்கத்தில் தான் மஞ்சள் காமாலையில் அவதிப்பட்டு நல்லமுறையில் வந்தவுடன் தாயார் இறந்துவிட்டார்கள். ஆகையால் சொந்த ஊர் ஆந்திராவிற்கு சென்று தாயாரின் இறுதி சடங்குகள் முடித்துவிட்டு மறுபடியும் சென்னைக்கு வந்து மீண்டும் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் பணிக்கு வரவில்லை. எனவே, தான் மருத்துவ சான்றிதழ்களுடன் பணியில் சேர்ந்து கொள்கிறேன். என்று கூறியுள்ளார்.

இதனை முன்னிட்டு 22.02.1999 நாளிட்ட கடிதத்தில் தலைமை மருத்துவர் அரசு பொது மருத்துவமனை அவர்கள் மேற்படி பணியாளரை பரிசோதித்து அன்னார் மேற்கொண்டு பணி செய்திட தகுதியானவரா என அறிந்திட மருத்துவ குழுவின் தகுதி சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு பொது மருத்துவமனையின் மருத்துவக்குழுமம் தனது 01.12.1999 நாளிட்ட கடிதத்தில் மருத்துவ குழுமத்தின் மருத்துவ தகுதி சான்றிதழ் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டது.

ஆணையர் அவர்களால் பணியாளரை மீண்டும் பணியில் சேர அனுமதித்த ஆணையரின் உத்தரவின்படி மண்டல அலுவலர்–3, அவர்களின் செயல்முறை ஆணை14.01.2000 அன்று வழங்கப்பட்டது. பணியாளர் இச்செயல்முறை ஆணையை பெற்றுக் கொண்ட 28.01.2000 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார். இதற்கான பதிவு பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. இந்நிகழ்வின் தொடர்ச்சியாக விசாரணை அலுவலர் நியமனம் மேற்கொள்ளப்பட்டு விசாரணை அலுவலர் தனது விசாரணையினை மேற்கொண்டார். அத்தருணத்தில் விதி 9(1)னை விலக்கிடாமல் விதி 9(2)ன் குறிப்பிட்டு நேர்முக விசாரணைக்கு பணியாளரை ஆஜராகிட பணிக்கப்பட்டது.

அதன்படி பணியாளர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அலுவலராக திரு.சந்திரசேகரன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–5, அவர்களை நியமனம் செய்து செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. விசாரணை அலுவலர் தனது விசாரணையை 18.02.2000 அன்று நடத்தி தனது விசாரணை அறிக்கையை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

**விசாரணை அலுவலரின் குறிப்புரை:–** 02.05.1998 முதல் பணிக்கு வராத இவருக்கு 08.06.1998 அன்றும் 03.08.1998 அன்று உதவி செயற்பொறியாளர், பகுதி–9, அவர்களின் குறிப்பாணை அனுப்பி விளக்கம் கோரப்பட்டுள்ளது. இவ்விரு குறிப்பாணைக்கும் முறையே 24.06.1998 மற்றும் 24.08.1998 அன்றும் விளக்கம் அளித்துள்ளார். இதில் அவர் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் முன்னறிவிப்பு கொடுக்க இயலவில்லையென்றும் தற்சமயம் பணிக்கு சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

இக்குறிப்பாணைகளுக்கு உரிய காலத்தில் விளக்கம் அளித்துள்ள இவர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் பணிக்கு வராதது குறித்து முன்னறிவிப்பு கொடுத்திருக்கலாம் எனவே, இவர் கூறும் கூற்றை ஏற்க இயலாததால் இக்குற்றம் உறுதி செய்யப்படுகிறது. 2) துப்புரவு துறையில் அன்றாடம் பணிக்கு வராத நிரந்தர தொழிலாளர்களின் இடத்தில் பணி செய்ய பதில் ஆட்கள் பணிமர்த்தி அன்றாட பணியை செய்ய கூடிய வாய்ப்பு உள்ளதால் இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆகாது.

**<u>ம.அ.3.ந.க.எண்.சி3/4097/1998</u>**

இவ்விசாரணை அறிக்கை நகல் ஒன்று பணியாளருக்கு சார்பு செய்யப்பட்டு தனியரின் கூடுதல் விளக்கம் கீழ்கண்டவாறு பெறப்பட்டது.

துப்புரவு பிரிவு ரீச்–15, பகுதி–9, மண்டலம்–3ல் துப்புரவு பணியாளராக பணிபுரியும் தான் 02.05.1998 முதல் 27.01.2000 வரையிலான காலத்திற்கு பணிக்கு வராததற்கு தகுந்த விளக்கத்தை விசாரணை அலுவலர் அவர்களின் விசாரணையின் போது தெளிவுப்படுத்தி விட்டார் எனவும், இதில் முதற்குற்றச்சாட்டு ஏற்கக்கூடியதாக இல்லையென கூறியுள்ளார்.

எனவே, தனது உண்மை நிலை இதுவே என்பதாலும் கிட்டத்தட்ட 21 மாதங்களுக்கு பணிக்கு வராததால் சம்பளம் இழப்பு ஏற்பட்டு இதனால் குடும்பம் மிக்க வறுமையில் கடனில் மூழ்கி வாடுவதாலும் தனக்கு இதனையே ஒரு பெருந் தண்டனையாக ஏற்று பாவிக்கும்படி இம்மனுவின் மூலம் தெரிவித்து இனி எடுத்திட வேண்டிய உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

விசாரணை அலுவலரின் அறிக்கை 04.04.2000ல் பெறப்பட்டு தனியருக்கு 06.07.2004ல் சார்பு செய்யப்பட்டு கூடுதல் விளக்கம் பெறப்பட்டது. விசாரணை அலுவலரின் அறிக்கையை 4 ஆண்டுகள் காலதாமதாக சார்வு செய்த இளநிலை உதவியாளர், அவர்களுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டு தனியே மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தனியர் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார்.

எனவே, தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு பணியாளரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை, அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டு கடுமையானவை. இவை கடுமையான தண்டனைக்குரியவை, எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகியதில் தனியரின் ஊதிய உயர்வினை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து இறுதி ஆணை வழங்கப்பட்டது.

மேலும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 02.05.1998 முதல் 27.01.2000 வரையிலான காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்தி வரன்முறைப்படுத்திட அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.ஆர்.பவுல், இரவு துப்புரவு பணி, ரீச்–15, பகுதி–9, மண்டலம்–3, என்பவர் 02.05.1998 முதல் 27.01.2000 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டிற்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.அ.1.ந.க.எண்.அ6/049/2008</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 20.09.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :586/2008 பொருள் எண்.50

**<u>பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்தியது – அரசின் பின்னேற்பு வேண்டுதல்</u>**

திரு. வி. எத்திராஜுலு, துப்புரவு பணியாளர், வார்டு –11, பகுதி –3, மண்டலம் –1 என்பவர் 30.6.2006 முதல் வயது முதிர்வு ஓய்வில் சென்றுள்ளார். அன்னாருக்கு ஓய்வூதியம் வழங்கும் பொருட்டு தணிக்கைக்கு கோப்பு அனுப்பப்பட்டது. 10.07.2006 நாளிட்ட தணிக்கை துறை இயக்குநரின் குறிப்பில், 2002, 2003 மற்றும் 2004ம் ஆண்டுகளில், தொடர்ந்து ஒரு வருடத்திற்கு மேலாக பணிக்கு வராமைக்கு எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணை பணிப்பதிவேட்டில் பதியப்பட வேண்டும் மற்றும் அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும் எனவும், குறிப்பிட்டதால், 13.4.2007 நாளிட்ட ஆணையாளரின் உத்திரவுபடி ரூ.1275/– தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

தனியர் 5.2.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு 9 (1) விதியின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, பணிக்கு வராத காலமான 5.2.2002 முதல் 17.10.2002 வரை தகுதியுள்ள விடுப்பாக பாவிக்க 25.09.2006 நாளிட்ட ஆணையாளரின் செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. எத்திராஜுலு, துப்புரவு பணியாளர், 2003 மற்றும் 2004ம் ஆண்டுகளில் சர்க்கரை நோய் காரணமாக மூளை பாதித்து கால்கள் செயலிழந்து வாய் பேச முடியாத சூழ்நிலையில் இருந்ததால் 7.4.2003 முதல் 15.07.2004 வரை மருத்துவ விடுப்பு விண்ணப்பம் உரிய காலத்தில் அளித்துள்ளதால், இவர் மீது நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல், அன்னாரின் குடும்ப சூழ்நிலையை கருத்திற் கொண்டு, மருத்துவ விடுப்பின் பேரில் சம்பளமில்லா விடுப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மனிதாபிமான அடிப்படையில் இவர் உதவி செயற் பொறியாளரால் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனியர் அளித்த மருத்துவ சான்றுகளின் அடிப்படையில், மருத்துவ குழுமத்திற்கு பரிந்துரைக்கப்படாத நிலையில், ஓராண்டிற்கு மேல் விடுப்பில் இருந்ததால், அரசுக்கு அனுப்பிதான் மருத்துவ விடுப்பு பெற வேண்டும் என அரசு கடித எண். 58735/83–1 பணியாளர் துறை 12.09.83ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் 7.4.2003 முதல் 15.07.2004 வரை 1 வருடம் 3 மாதம் 19 நாட்கள் துய்த்த மருத்துவ விடுப்பு ஓராண்டினைக் கடந்துள்ள நிலையில் உதவி செயற் பொறியாளர் அளவில் மருத்துவ குழுவின் பரிந்துரை பெறாமல் 16.07.2004 முதல் அனுமதிக்கப்பட்டுள்ளார். 7.4.2003 முதல் 15.07.2004 வரை மருத்துவ விடுப்பு பேரில் சம்பளமில்லா விடுப்பாக அனுமதிக்கப்பட்டமைக்கு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி பின்னேற்பு ஆணை பெற மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண். ஈ2/30872/2008**

**ஆணையாளர் அவர்களின் 13.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :587/2008 பொருள் எண்.51

**கூடுதல் சுகாதார அலுவலர் தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் ஒன்றாகும். இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளாகும்.

2008–2009ம் ஆண்டு கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் 01.04.2008 என்ற மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்படவேண்டியுள்ளது. சென்னை மாநகராட்சி 1998ம் ஆண்டு பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணிவிதிகளின்படி சுடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு:–

| Name of the Post and Scale of pay | Mode of Appointment | Qualification |
|---|---|---|
| Additional Health Officer<br>10000-325-15200 | 1. By promotion from the cadre of Asst.Health Officer and the holdler of the post of Superintendent, Communicable Diseases Hospital, in Class-II Service. | 1. M.B.B.S. Degree with Diploma in Public Health.<br>2. A pass in Account Test for Executive Officers.<br>3. Must have served as Asst.Health Officer/ Superintendent,Communicable Diseases Hospital, atleast for a period of 2 years. |

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் கூடுதல் சுகாதார அலுவலர் பதவி வகுப்பு–1(பி)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி)ன்படி இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு இப்பதவியினை நிரப்பும் அதிகாரம் ஆகியவற்றை மன்றம் பெற்றுள்ளது.

கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிட விவரம் பின்வருமாறு:–

| கூடுதல் சுகாதார அலுவலரின் பெயர் | கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் விவரம் |
|---|---|
| டாக்டர்.பெ.குகானந்தம் | சுகாதார அலுவலராக 04.08.2008 அன்று பதவி உயர்வு பெற்றதால் காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ளது. |

கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கு டாக்டர்.எஸ்.கிருஷ்ணா, உதவி சுகாதார அலுவலரது பெயர் பணிமூப்பின் படி பரிசீலிக்க சுகாதாரத்துறை குறிப்பு அனுப்பியுள்ளது.

மேற்படி அலுவலர் குறித்த விவரம் பின்வருமாறு:–

| பெயர் மற்றும் பதவி | குறிப்புரை |
|---|---|
| டாக்டர்.எஸ்.கிருஷ்ணா,<br>உதவி சுகாதார அலுவலர் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படி கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும், இவர் மீது துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததாலும் இவரது பெயரினை கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

**பொ.து.ந.க.எண். ஈ2/30872/2008**

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

அ) 01.04.2008ஐ மைய நாளாகக் கொண்டு கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கு டாக்டர்.எஸ்.கிருஷ்ணா, உதவி சுகாதார அலுவலரது பெயரினை கொண்டு தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

ஆ) 2008ம் ஆண்டு ஏற்பட்டுள்ள கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடத்தினை மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபரைக்கொண்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக கூடுதல் சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளித்து ரூ.10000–325–15200 (இதர படிகளுடன்) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணிநியமனம் செய்திடவும்,

இ) மேற்படி பணிநியமனம் வழங்கப்பட்ட பின்பு அரசின் உறுதியாக்கம் பெற உரிய செயற்குறிப்புகள் அரசுக்கு அனுப்பவும்,

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :588/2008 பொருள் எண்.52

**துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி உயர்வு**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் அரசாணை எண். 79 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 09.03.2001 ன் படி ஒரு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை, (DEPUTY PROJECT CO-ORDINATOR) தொடர அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை எண். 161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மா.ந.3/ நாள் 28.08.98 ன் படி மேற்படி பதவிக்கான வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகள் மற்றும் காலமுறை ஊதியம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| பதவியின் பெயர் (ம) ஊதிய விகிதம் | நியமன முறை | தகுதி |
|---|---|---|
| துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் ரூ.14300–400–18300 | 1) மாவட்ட குடும்ப நலத்துறையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் | மாவட்ட குடும்ப நலத்துறையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக இரண்டு வருடங்கள் தொடர்ந்து பணியாற்றி இருக்க வேண்டும் |
| | 2) மாநில அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் எந்த ஒரு துறை அல்லது நிறுவனத்திடமிருந்து அயற்பணி அடிப்படையில் நியமித்தல் | தமிழ் நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலருக்கு இணையான பதவியில், பொறுப்பில் இரண்டு ஆண்டுக்கு குறையாது பணிபுரிந்திருத்தல் வேண்டும். |

துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 1–B யின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919, 85(3) (b) யின் படி இப்பதவியினை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பணிநியமனம் செய்திட மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

மேற்படி பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க மைய நாள் ஒவ்வொரு ஆண்டு பிப்ரவரி முதல் நாள் ஆகும். கடைசியாக டாக்டர். திருமதி. சி.வி. மதனகாந்தா, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் என்பவருக்கு 14.11.1995 நாளிட்ட ஆணையரது செயல்முறை ஆணை மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/2127/94 ன் படி துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. டாக்டர். திருமதி. சி.வி. மதனகாந்தா அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.01.98 அன்று ஓய்வு பெற்றார்கள்.

துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை மேற்படி அலுவலர் ஓய்வு பெற்ற பின்பு நிர்வாக காரணங்களினால் பதவி உயர்வு மூலம் நிரப்பபடாமல் இருந்தது. இப்பதவியினை பின்வரும் காரணங்களினால் நிரப்ப அவசியமாகிறது.

1) சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின் மூலம் சென்னை மாநகரில் வாழும் சுமார் 50 இலட்சம் மக்களில் 50 விழுக்காடு தாய்சேய் நல மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.
2) 93 நகர நலவாழ்வு மையங்கள் 21 மகப்பேறு மருத்துவமனை, இரண்டு 24 மணி நேர அவசர மருத்துவ மனை மூலம் மேற்கூறப்பட்ட சென்னை நகர் மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.
3) மேலும், 8 மண்டலங்களில் குறுகிய காலத்தில் 24 மணி நேர அவசர மருத்துவ மனை ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
4) டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 21984 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தலா ரூ. 6000/– வீதம் நிதி வழங்கும் திட்டம் செயல்படுத்தபட்டுவருகிறது.

5) மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 1140 பயனாளிகளுக்கு திருமண நிதி உதவி ரூ. 15000/– வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
6) மத்திய அரசு திட்டமான ஜனனி சுராக்ஷா யோஜானா திட்டத்தின் கீழ் (கா்ப்பிணி பெண்களுக்கு) தலா ரூ. 600/– வீதம் சுமார் 7000 பயனாளிக்கு உதவி வழங்கு திட்டம் செயல் படுத்தப்படுகிறது.
7) ஆண்டு தோறும் சுமார் 14,000 தாய்மார்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை நடைபெறுகிறது.
8) 2004 ம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சியில் சிக்கலான பிரசவம் (சிசேரியன் மூலம்) நடைபெறுகின்றன.

<u>மூன்றாண்டுகளில் இத்துறையில் நடைபெற்ற பிரசவங்கள் மற்றும் கருத்தடை சாதனைகள்.</u>

| வரிசை எண் | நிகழ்வுகள் | 2005–06 | 2006–07 | 2007–08 |
|---|---|---|---|---|
| 01. | பிரசவம் மற்றும் சிக்கலான பிரசவம் | 14180 | 13629 | 14300 |
| 02. | குடும்ப நல கருத்தடை சிகிச்சை | 12429 | 11732 | 12433 |
| 03. | காப்பர் டி | 21947 | 21444 | 21944 |
| 04. | ஒரு வயது குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி | 75946 | 78921 | 79054 |

சென்னை மாநகரில் பெருகி வரும் மக்கள் தொகையில் பொருளாதார மற்றும் நலிவுற்ற மக்களுக்கு குறிப்பாக தாய்சேய் நலப்பணியினை விரிவுப்படுத்தி அன்றாட மருத்துவ சேவைகளை நிறைவேற்றிட துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை தற்போது உடனடியாக நிரப்ப அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை ஊட்ட பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவி மூலம் நிரப்பபட வேண்டும். தற்போது மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் பின்வரும் அலுவலர்கள் அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

| வ. எண் | பெயர் | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | டாக்டர். திருமதி. கே. திவ்யசுந்தரி | 18.09.2007 |
| 02 | டாக்டர். திருமதி. கே. விஜயா | 05.12.2007 |

வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி மேற்படி அலுவலர்கள் ஊட்டப்பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டுகாலம் பணி நிறைவு செய்யவில்லை. பின்வரும் காரணங்களுக்காக இவரது பெயர்களை துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக பரிசீலிக்க வேண்டியுள்ளது.

1. சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் துணை திட்ட ஒருங்கினைப்பாளர் பதவி 10 வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ளது.

2. மேற்படி 2 அலுவலர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல அலுவலர் பதவியில் முறையாக 3 ஆண்டுகாலம் பணி நிறைவு செய்துள்ளதாலும், மேலும் ஏற்கனவே மண்டல அலுவலர் பதவியில் 4 வருடங்களாக கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்ததாலும் அத்துடன் மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டுகாலம் பணி நிறைவு செய்து அனுபவம் மிக்க அலுவலர்கள் ஆனதால் இவர்களது பெயரிணைக் கொண்டு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு பரிசீலிக்கலாம்.

3. துறைத்தலைவர் பதவியான மக்கள் தொகை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி (POPULATION PROJECT CO-ORDINATOR POST) அரசாணை எண் 79 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 09.03.2001 ன் படி தொடர வாய்ப்பு இல்லாத நிலையில் ஒரு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி தொடர அனுமதி உள்ளது. துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி 10 ஆண்டுகளாக நிரப்பப்படாமல் துறைத்தலைவர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

4. மக்கள் தொகை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி கலைக்கப்பட்டுவிட்டதால், மாவட்ட குடும்ப நலத்துறையின் சேவையினை கருத்தில் கொண்டு மேற்கூறப்பட்டவர்களை கொண்டு துறை தலைமை பதவியான துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு இவர்களைக் கொண்டு நிரப்ப அவசியமாகிறது.

இப்பொருள் நியமனக்குழு தீர்மான எண்.308/2008, நாள்.19.09.2008ல் அடுத்த நியமனக்குழு கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்கும் பொருட்டு ஒத்திவைத்து நியமனக்குழு தீர்மானித்தது.

எனவே, மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியை நிரப்ப

(அ) 01.02.2008 ஐ மைய நாளைக் கொண்டு மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை மாவட்ட குடும்ப நல மருத்துவர்களான (1) டாக்டர். திருமதி. கே. திவ்யசுந்தரி மற்றும் (2) டாக்டர். திருமதி. கே. விஜயா ஆகியோரது பெயரினைக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கவும்,

(ஆ) துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியில் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி ஊட்ட பதவியினை மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவி 2 ஆண்டுகளில் பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்பதனை தளர்வு செய்து இதர தகுதிகள் பூர்த்தி செய்துள்ள இவர்களது பெயரைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

(இ) துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு பணி விதிகளின் படி மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் 2 ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதிமுறைகளிலிருந்து டாக்டர். திருமதி. கே. திவ்யசுந்தரி என்பவருக்கு தளர்வு செய்து இவரை துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியில் ரூ. 14300–400–18300 என்ற கால முறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன் தற்காலிகமாக அரசாணையை எதிர்நோக்கி இவருக்கு பதவி உயர்வு வழங்குவதற்கும் மற்றும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/5859/2001

ஆணையாளர் அவர்களின் 26.09.2008 நாளிட்ட குறிப்பு

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :589/2008 பொருள் எண்.53

**மருத்துவ அலுவலர் பணி மூப்பு நிர்ணயித்தல்**

சென்னை மாநகராட்சி, தொற்று நோய் மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர்.எஸ்.பாஸ்கர், என்பவரது 31.07.2008 தேதியிட்ட கடிதத்தில், தான் தொகுப்பூதிய அடிப்படையில் மருத்துவ அலுவலராக 03.06.2005ல் பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வந்த நிலையில் 31.05.2008 முற்பகல் முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும் ஆனால் தனக்கு பின்னர் பணியில் சேர்ந்த 21 மருத்துவ அலுவலர்கள் அனைவரும் காலமுறை ஊதிய விகிதத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளதால் பணியில் மூப்பு நிலை இல்லாமல் இளையவராக உள்ளதாக தெரிவித்து பணியில் மூப்பு நிலை நிர்ணயம் செய்யுமாறு கோரியுள்ளார்.

அரசாணை எண்.357, ந.நி.ம.கு.வ.துறை. நாள்.03.09.2004ல் சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள 10 மருத்துவ அலுவலர் பணியிடங்களை ஒப்பந்த முறையில் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பிக் கொள்ளலாம் என அரசு அனுமதி அளித்ததைத் தொடர்ந்து மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட நபர் பட்டியலில் இருந்து டாக்டர்.எஸ்.பாஸ்கர் என்பவர் மாதம் ரூ.10,000/– என்ற தொகுப்பூதிய அடிப்படையில் மருத்துவ அலுவலராக இவ்வலுவலக 01.06.2005 தேதியிட்ட செயல்முறை ஆணையின்படி 03.06.2005 முதல் பணி நியமனம் செயப்பட்டார். மன்றத்தின் ஒப்புதல் பெற்று தனியரின் பணிகாலம் 3.6.2006 முதலும் 3.6.2007முதலும் இரண்டு ஆண்டுகளுக்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. அரசாணை எண்.320, ந.நி.ம.கு.வ.து. நாள்.16.07.2007ன்படி டாக்டர்.எஸ்.பாஸ்கர் என்பவருக்கு வயது வரம்பு கடந்த நிலையில் பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசால் வயது வரம்பு தளர்வாணை வழங்கப்பட்டது. அரசாணை எண்.114, ந.நி.ம.கு.வ.து. நாள்.16.03.2008ன்படி இவர் மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதியம் ரூ.8000–275–13,500ல் 31.5.2008 முதல் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து இவரது பணி நியமனத்திற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது. (மன்றத் தீர்மான எண்.383/2008, நாள்.30.07.2008)

மேற்படி நபர் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வந்த போது அரசாணை (ப) எண்.57 நாள்.13.2.2007ல் சுகாதார துறையில் காலியாக உள்ள பணியிடங்களில் 50 சதவிகித பணியிடங்களை 2007 ஆம் ஆண்டிலும் மீதமுள்ள 50 சதவிகித இடங்களை அடுத்து வரும் ஆண்டிலும் நிரப்பிக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு கீழ்கண்ட செயல்முறை ஆணைகள் மூலம் பின்வரும் மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

| வ எண் | செயல்முறை ஆணை எண் தேதி | | மருத்துவ அலுவலர்களின் பெயர் | | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|---|
| I | சு.து.ந.க.எண். சி1/7532/06 நாள்.13.7.07 | 1 | டாக்டர்.வி.ரகு நாதன் | – | 14.07.2007 |
| | | 2 | டாக்டர்.ஏ.பாத்திமா | – | 14.07.2007 |
| | | 3 | டாக்டர்.எல்.கே.வெண்ணிலா | – | 17.07.2007 |
| | | 4 | டாக்டர்.ஜெயந்தி | – | 17.07.2007 |
| II | சு.து.ந.க.எண். சி1/7532/06 நாள்.7.11.07 | 5 | டாக்டர்.பி.ராஜேஸ்வரி | – | 15.11.2007 |
| | | 6 | டாக்டர்.ஏ.சுன்முன் பீ | – | 12.11.2007 |
| | | 7 | டாக்டர்.எஸ்.திவாகர் | – | 21.11.2007 |
| III | சு.து.ந.க.எண். சி1/7532/06 நாள். 13.11.07 | 8 | டாக்டர்.முரளிகாந்த் | – | 16.11.2007 பிற்பகல் |
| | | 9 | டாக்டர்.கே.வசந்தா | – | 15.11.2007 |
| IV | சு.து.ந.க.எண். சி1/7532/06 நாள். 6.11.07 | 10 | டாக்டர்.இளஞ்செழியன் | – | 3.12.2007 |
| V | சு.து.ந.க.எண். சி1/7532/06 நாள். 6.2.08 | 11 | டாக்டர்.சி.ஆர்.வி.நரசிம்மலு | – | 11.02.2008 |
| | | 12 | டாக்டர்.ஜே.லாவன்யா | – | 11.02.2008 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VI | சு.து.ந.க.எண். சி1/7532/06 நாள். 24.12.07 | 13 | டாக்டர்.எஸ்.கந்தவேலு | – | 28.12.2007 |
| | | 14 | டாக்டர்.கே.கிருபாசங்கர் | – | 31.12.2007 |
| | | 15 | டாக்டர்.விமலாகரன் | – | 02.01.2008 |
| | | 16 | டாக்டர்.சுவர்ண சரவணன் | – | 28.12.2007 |
| | | 17 | டாக்டர். முத்தமிழ் செல்வன் | – | 31.12.2007 |
| | | 18 | டாக்டர்.எஸ்.இளையராஜா | – | 02.01.2008 |
| | | 19 | டாக்டர்.பி.சுரேசு | – | 28.12.2007 |
| VII | சு.து.ந.க.எண். சி1/7532/06 நாள். 21.2.08 | 20 | டாக்டர்.ஜி.சிவகுமார் | – | 03.03.2008 |
| VIII | சு.து.ந.க.எண். சி1/354 /08 நாள்.20.3.2008 | 21 | டாக்டர்.முகமது இஸ்மாயில் | – | 26.3.2008 |
| | | 22 | டாக்டர்.ஸ்ரீ தேவி | – | 06.06.2008 |
| IX | சு.து.ந.க.எண்.சி1/5859/01 நாள்.31.05.2008 | 23 | டாக்டர்.பாஸ்கர் | – | 31.05.2008 |
| X | சு.து.ந.க.எண். சி1/1173/2008 நாள். 10.7.08 | 24 | டாக்டர்.சந்திர சேகர் | – | 21.7.2008 பிற்பகல் |
| | | 25 | டாக்டர்.குமர குரு ராஜன் | – | 21.7.2008 பிற்பகல் |
| | | 26 | டாக்டர்.சுரேஷ் குமார் | – | 21.07.2008 பிற்பகல் |
| | | 27 | டாக்டர்.எம்.அருள் | – | 21.07.2008 பிற்பகல் |

மேற்கண்ட பட்டியலில் உள்ள நபர்களில் தொகுப்பூதிய அடிப்படையில் 03.06.2005ல் பணி நியமனம் செய்யப்பட்ட டாக்டர். எஸ்.பாஸ்கர், மருத்துவ அலுவலர் என்பவர் பணி மூப்பு வாய்ந்தவராவார். இவர் 3.06.2005 முதல் இடை நிறுத்தம் செய்யப்படாமல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். 31.05.2008 முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு பின்னர் பணி நியமனம் செய்யப்பட்ட மேற்கண்ட நபர்கள் அனைவரும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே பணிமூப்பு நிர்ணயம் செய்ய கோரும் தனியரின் கோரிக்கை நியாயமானதே. மேலும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு மூப்பும் பெற்றுள்ளார்.

தனியரின் கோரிக்கை தமிழ்நாடு மாநில சார்நிலை பணி பொது விதி 23 (a) (i) :- ன் கீழ் பரிசீலிக்கப்பட்டது. அவ்விதியில் If a person appointed temporarily either by sub –rule (a) or (b) of the Rule -10 to fill a vacancy in any service, class or category otherwise than in accordance with the rules governing appointment thereto such vacancy being a vacancy which may be filled up by direct recruitment is subsequently appointed to the service in accordance with the rules, he shall commence his probation if any, in such category either from the date of his first temporary appointment or from such subsequent date, as the appointing authority may determine.

எனவே மேற்கண்ட விதியின்படி டாக்டர்.எஸ்.பாஸ்கர் மருத்துவ அலுவலர் அவர்களின் கோரிக்கையை ஏற்று இவர் பணியில் சேர்ந்த நாளான 3.06.2005 அன்று கருத்தியயலாக பணப்பயனின்றி பணி மூப்பினை நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :590/2008 பொருள் எண்.54

**பயிற்சி பயில அனுமதி அளித்தமைக்கு பின்னேற்பு**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம் 9 ல் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர்.எச்.பூமா, என்பவர் அரசாணை எண்.G.O.(D).No.572, H & FW Dept (MCA1) Dated 14.05.2008ன்படி நீரிழிவு நோய் சம்பந்தமான (Diobetology by Distance Education) 6 மாத பயிற்சியினை சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரியில் ஆகஸ்ட் 2008 ஆம் ஆண்டு முதல் தனது அலுவலக பணிக்கு எவ்வித குந்தகமும் விளைவிக்காவண்ணம் மேற்கண்ட பயிற்சியினை மேற்கொள்ள அனுமதி கோரி 28.07.2008 தேதியிட்டு விண்ணப்பத்தில் கோரியுள்ளார். விண்ணப்பத்திற்கான கடைசி நாள்.31.07.2008 ஆகும்.

டாக்டர்.எச்.பூமா, என்பவர் சென்னை மாநகராட்சியில் 12.5.1995ல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டார். அவரது பணிகள் மருத்துவ அலுவலர் பதவியில் 12.5.95 முதல் வரண் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அவருக்கு 10.11.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் டாக்டர்.எச்.பூமா, மருத்துவ அலுவலர், அவர்கள் நீரிழிவு நோய் சம்பந்தமான 6 மாத பயிற்சியினை சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரியில் ஆகஸ்ட் 2008 ம் ஆண்டிலிருந்து பயிலுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும், காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும், இப்படிப்பினை பயிலும் காலங்களில் வழக்கமான அன்றாட பணிகளுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது என தெரிவித்துள்ளதின் அடிப்படையில் இவர் மேற்படி பயிற்சியினை பயில இவ்வலுவலக செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/4444/2008 நாள் 31.07.2008 ன்படி அனுமதி அளிக்கப்பட்டது.

1. தனியர் சர்க்கரை நோய் சம்பந்தமான 6 மாதகால பயிற்சி பயிலும் காலத்தில் சென்னை மாநகராட்சியின் அன்றாட அலுவலக பணிகளுக்கு குந்தகம் ஏதும் ஏற்படும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது.
2. தற்போது அளிக்கும் அனுமதி ஆகஸ்ட் 2008 முதல் 6 மாதங்களுக்கு மட்டும் பொருந்தும்.
3. கல்வி பயிலும் காலத்தில் பணியிட மாற்றம் ஏதும் கோரக்கூடாது.
4. இப்பயிற்சிக்கு உண்டாகும் செலவுத் தொகை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட மாட்டாது.
5. பயின்ற இப்படிப்பிற்காக அலுவலகத்தில் எப்பணியிடத்திற்கும் முன்னுரிமை கோரக்கூடாது.
6. மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் செயலில் ஈடுபட்டால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்படும்.

எனவே மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியர் சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரியில் 2008–2009 ஆம் ஆண்டில் (Certificate Course in Diabetology by Distance Education ) பயில அனுமதி அளித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்புஅனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி2/5502/08**

**ஆணையாளர் அவர்களின் 06.08.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :591/2008 பொருள் எண்.55

**மன்ற தீர்மானம் ஒரு பகுதி மாற்றம்**

சென்னை மாநகராட்சியில் உள்ள சுகாதார மையம் மற்றும் குடும்பநல வாழ்வு மையத்திற்கு சென்னையில் வாழ்கின்ற நடுத்தர மக்களும், 1335 குடிசைப்பகுதிகளில் உள்ள மக்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். 500 படுக்கை வசதி கொண்டு, செயல்படும் தொற்று நோய் மருத்துவமனை போதிய மருத்துவ அதிகாரிகள் இல்லாததாலும், தொற்று நோய் பரவும் காலங்களில் அதனை தடுத்து நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும், சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு பள்ளி சுகாதார திட்டம், குடிசை வாழ் மக்களுக்கான குடிசை நல திட்டம், வெள்ளம், மழை, சுனாமி போன்ற இயற்கை சீரழிவு காலங்களில் மருத்துவ முகாம்களில் பணிபுரியவும், மருத்துவ அலுவலர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலும் 2007–2008ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சென்னை மாநகராட்சியில் 155 கோட்டங்களிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. வளர்ந்து வரும் மருத்துவ சேவைகளின் தேவைகளை சென்னை மாநகர மக்களுக்கு அளிக்கும் வண்ணம் தற்சமயம் சென்னை மாநகராட்சி சுகாதார துறையில் காலியாக உள்ள 18 மருந்தாளுநர் பணியிடங்களில் 10 மருந்தாளுநர் பணியிடங்களை சரண் செய்து அதற்கு பதிலாக 10 மருத்துவ அலுவலர் பணியிடங்களை தோற்றுவித்து வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பணி நியமனம் செய்யலாம் என ஆய்வு கூட்டத்தின் போது முடிவு எடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 10 மருந்தாளுநர்கள் பதவியை சரண் செய்து 10 மருத்துவ அலுவலர்கள் பணியிடங்களை தோற்றுவிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. (மன்றத் தீர்மான எண்.115/2008 நாள்.03.05.2008) இவ்வாறு 10 மருந்தாளுநர் பணியிடங்களை சரண் செய்து 10 மருத்துவ அலுவலர் பணியிடங்களை தோற்றுவிப்பதால் சென்னை மாநகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ.11 இலட்சம் ரூபாய் கூடுதலாக செலவாகும். இதனால் நிர்வாக நலன் கருதியும் சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதிச் சுமையை குறைக்கும் பொருட்டும் மேற்கண்ட 10 மருந்தாளுநர் பணியிடங்களை சரண் செய்து 10 மருத்துவ அலுவலர் பணியிடங்களை தோற்றுவிப்பதற்கு பதிலாக 5 மருத்துவ அலுவலர் பணியிடங்களை தோற்றுவிக்கலாம். இவ்வாறு தோற்றுவிக்கும் பட்சத்தில் சென்னை மாநகராட்சிக்கு கூடுதல் செலவு ஏதும் இல்லை.

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் மொத்தம்–72, மருந்தாளுநர் பணியிடங்கள் உள்ளன அதில் 30 யூனிட்டுகளிலும் ஒரு யூனிட்டிற்கு ஒரு மருந்தாளுநர் வீதம் 30 பேரும், ஒரு மண்டலத்திற்கு 2 மருந்தாளுநர்கள் வீதம் 10 மண்டலங்களுக்கு 20 மருந்தாளுநர்களும், தொற்று நோய் மருத்துவ மனையில் 24 மணி நேரம் சுழற்சி முறையில் பணியாற்றிட 4 மருந்தாளுநர்களும், மருத்துவ பண்டக சாலைக்கு 4 மருந்தாளுநர்களும், விடுமுறை மற்றும் மாற்று ஏற்பாடுகளுக்காக 4 என 62 மருந்தாளுநர்கள் தேவைப்படுகிறார்கள். தற்போது சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படும் மருந்தாளுநர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு நிர்ணயிக்கலாம்.

| | |
|---|---|
| பகுதிக்கு 1 மருந்தாளுநர் வீதம் 30 பகுதிக்கு | = 30 X 1 = 30 |
| மருந்தாளுநர்கள் மண்டல அளவில் | = 10 X 2 = 20 |
| மருத்துவ பண்டகசாலை | = 04 |
| தொற்று நோய் மருத்துவ மனை | = 04 |
| இருப்பு | = 04 |
| | ---- |
| மொத்தம் | 62 |
| | ---- |

எனவே, நிர்வாக காரணங்களால் தீர்மான எண்.115/2008, நாள்.03.05.2008 நாளிட்ட மன்றத் தீர்மானத்தில் ஒரு பகுதி மாற்றம் செய்து சென்னை மாநகராட்சி சுகாதார துறையில் காலியாக உள்ள 18 மருந்தாளுநர் பணியிடங்களில் 10 மருந்தாளுநர் பணியிடங்களை சரண் செய்து அதற்கு பதிலாக ரூ.8000–275–13500 என்ற ஊதிய விகிதத்தில் 10 மருத்துவ அலுவலர் பணியிடங்களை தோற்றுவிப்பதற்கு பதிலாக 5 மருத்துவ அலுவலர் பணியிடங்களை தோற்றுவிக்க அரசின் ஆணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.(ம)ந.க.எண்.எம்.1/1237/06

ஆணையாளர் அவர்களின் 10.10.2008 நாளிட்ட குறிப்பு

29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :592/2008 பொருள் எண்.56

மன்ற தீர்மானத்திற்கு ஒரு பகுதி திருத்தம்

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் காலியாக உள்ள 30 நுண்ணோக்கியாளர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு மன்றத் தீர்மான எண்.455/07 நாள்.31.08.2007ல் கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

1. எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. D.M.L.T. எனப்படும் ஆய்வு கூட கல்வியில் தேர்ச்சி பெற்று தினக்கூலி அடிப்படையில் பணி செய்து வரும் தற்காலிக நுண்கிருமி நோக்கியாளர்கள் 4 நபரையும் பணிநிரந்திரம் செய்ய அரசின் ஒப்புதலுக்காக முன் மொழிவுகள் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ள நிலையில் அரசின் ஆணை பெற்ற பிறகு பணி நிரந்தரம் செய்யவும்,
3. மீதம் உள்ள 26 காலி பணியிடங்களையும் சென்னை மாநகராட்சியில் பணி செய்து வரும் D.M.L.T. ஆய்வு கூட கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களை கொண்டு நிரப்பவும்
4. வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தேர்வு செய்யவும்
5. வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தேர்வு செய்யப்படுவர்களின் சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் D.M.L.T. ஆய்வு கூட கல்வி படித்து தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கவும் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

நிர்வாக நலன் கருதி மன்ற தீர்மான எண்.455/07, நாள்.31.08.2007 உள்ள வரிசை எண்.3ஐ D.M.L.T./ C.M.L.T என திருத்தம் செய்யலாம்.

எனவே, மன்ற தீர்மான எண்.455/07, நாள்.31.08.2007 உள்ள வரிசை எண்.3ஐ கீழ்கண்டவாறு திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| வரிசை எண்.3 | மீதமுள்ள 26 காலி பணியிடங்களையும் சென்னை மாநகராட்சியில் பணி செய்து வரும் D.M.L.T./ C.M.L.T ஆய்வுக்கூட கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களை கொண்டு நிரப்பவும். |

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.இ7/34619/2007

ஆணையாளர் அவர்களின் 17.10.2008 நாளிட்ட குறிப்பு

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :593/2008 பொருள் எண்.57

**பணியமைப்பு**

திருவாளர்கள்.எஸ்.ரமேஷ், ஓட்டுநர், மண்டலம்–7, மற்றும் எம்.சிவா, ஓட்டுநர், மண்டலம்–9, ஆகியோர்கள் தட்டச்சர் பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால் தங்களுக்கு தட்டச்சர் பதவி வழங்குமாறு கோரி அளித்த மனுவினை பரிசீலித்ததில் தட்டச்சர் பதவிக்கான சென்னை மாநககாட்சி துணை வரைவு விதிகளில் ஓட்டுநர்கள் தட்டச்சர்களாக பதவி மாற்றம் செய்ய விதிகள் இல்லாததால் இத்தனியர்களுக்கு தட்டச்சர் பதவி மாற்றம் செய்ய அரசின் ஆணை வேண்டி மன்றத்தீர்மானம் எண்.451/2007 நாள்.31.08.2007ல் பெறப்பட்டு அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது.

இது குறித்து அரசு தன்னுடைய 11.08.2008 நாளிட்ட கடிதத்தில் தகுதிபெற்ற ஓட்டுநர்களுக்கு தட்டச்சர் பதவி வழங்கிட சென்னை மாநகராட்சி துணை விதிகளான வரைவு சட்டத்தில் (Draft by law) திருத்தம் செய்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது சென்னை மாநகராட்சியில் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.1196/90 நாள்.03.09.1990ன்படி தட்டச்சர் பதவிக்கு கீழ்கண்ட பணிநியமனமுறை மற்றும் கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

" By promotion from the post of clerical Attender, Record clerk and the lower category employees under Class III and IV including labour category brought under establishment in the ratio of 1:1"

(OR)

By Direct recruitment.

கல்வித்தகுதி

1. குறைந்தபட்ச கல்வித்தகுதி (10 வகுப்பு (S.S.L.C) தேர்ச்சி பெற்றிருத்தல்)
2. அரசு தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தால் நடத்தப்படும் கீழ்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அ) தட்டச்சு தேர்வு தமிழ் மற்றும் ஆங்கிலம் உயர்நிலை

அல்லது

ஆ) தட்டச்சு தேர்வு தமிழில் உயர்நிலை, ஆங்கிலத்தில் இளநிலை

அல்லது

இ) தட்டச்சு தேர்வு ஆங்கிலத்தில் உயர்நிலை தமிழில் இளநிலை

மேற்கண்ட சூழ்நிலை சென்னை மாநகராட்சி பொதுப்பணி வரைவு விதி 1981ல் உள்ள தட்டச்சருக்கான நியமனமுறையில் மட்டும் கீழ்கண்ட திருத்தம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தலாம்.

| நியமனமுறை | கல்வித்தகுதி |
|---|---|
| அ) பதிவுரு எழுத்தர், கிளரிக்கல் அட்டன்டர், பதவி உயர்வின் மூலம் 3 மற்றும் 4ஆம் பிரிவிலுள்ள கீழ்நிலைப் பணியாளர்களிலிருந்தும் மற்றும் தொழிலாளர் பிரிவிலிருந்து பணியமைப்பு பிரிவுற்கு கொண்டு வரப்பட்டவர்களிலிருந்தும் 1:1 விகிதத்தில்<br>ஆ) தட்டச்சர் பதவிக்கு இணையான ஊதிய விகிதம் கொண்ட பிறபதவிகளிலிருந்து பதவி மாற்றம் மூலமாக<br>அல்லது<br>இ) நேரடிநியமனம் | 1. குறைந்தபட்ச தகுதி 10 வகுப்பு (S.S.L.C) தேர்ச்சி பெற்றிருத்தல்<br>2. அரசு தொழில்நுட்ப கல்வி இயக்குனரகத்தால் நடத்தப்படும் கீழ்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்<br>அ) தட்டச்சு தேர்வு தமிழ் மற்றும் ஆங்கிலம் உயர்நிலை<br>அல்லது<br>ஆ) தட்டச்சு தேர்வு தமிழில் உயர்நிலை, ஆங்கிலத்தில் இளநிலை<br>அல்லது<br>இ) தட்டச்சு தேர்வு ஆங்கிலத்தில் உயர்நிலை தமிழில் இளநிலை |

**பொ.து.ந.க.எண்.இ7/34619/2007**

மேற்குறிப்பிட்ட தட்டச்சர் பதவிக்கான நியமனமுறையினை முன்னரே மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட மன்றத் தீர்மான எண்.1196/90 நாள்.05.09.1990ல் திருத்தம் கொண்டுவரப்பட்டதின் அடிப்படையிலும், சென்னை மாநகராட்சி வரைவு துணை விதி 1981ல் 24ல் வகை செய்யப்பட்டுள்ள தட்டச்சர் பதவியில் மேற்கண்ட திருத்தங்கள் மேற்கொள்ளவும், நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனியே இதற்கான அரசின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/30984/97</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 17.10.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :594/2008 பொருள் எண்.58

**<u>தற்காலிக பணியிடம் நீட்டிப்பு</u>**

சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டு 30.9.2003 வரை நீட்டிக்கப்பட்ட 1739 தற்காலிக பணியிடங்களை அரசாணை (ப)எண்.202, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை நாள் 14.6.2006ன்படி 1.10.2003 முதல் 30.9.2005 வரை நீட்டிப்பு செய்ததற்கு பின்னேற்பும், 1.10.2005 முதல் 30.9.2006 வரை ஓராண்டிற்கு நீட்டிப்பு வழங்கியும் அனுமதித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

1.10.2006 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் பின்னேற்பாணை தீர்மான எண்.457/2006, நாள் 30.11.2006ல் பெறப்பட்டு அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. மீண்டும் 1.10.2007 முதல் மேலும், ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி தீர்மானம் எண்.705/07, நாள் 29.12.2007ல் பெறப்பட்டு அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சென்னை மாநகராட்சியில் உள்ள தற்காலிக பணியிடங்களின் அவசியத்தை கண்டறிய, தொழில்நுட்ப குழுவினைக் கூட்ட ஏதுவாக அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்களிடமிருந்து உரிய முழுமையான விவரம் கிடைக்கப்பெறவில்லை தற்போது சம்பந்தப்பட்ட துறை / மண்டலங்களிலிருந்து உரிய விவரம் பெறவும் மற்றும் தொழில் நுட்ப குழு கூட்டத்தினைக் கூட்டவும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

எனவே, மேற்கண்ட சூழ்நிலையில் 1739 தற்காலிக பணியிடங்களை 1.10.2008 முதல் மேலும், ஓராண்டிற்கு நீட்டிக்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/31350/2002**
**ஆணையாளர் அவர்களின் 16.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :595/2008 பொருள் எண்.59

**தற்காலிக பணியிடம் நீட்டிப்பு**

சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் அரசு ஆணை (பல்வகை) எண்.646, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை, நாள் 16.9.1977ன்படி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 11 தற்காலிக பணியிடங்களை ஒவ்வொரு ஆண்டும் அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் மன்றத் தீர்மான எண்.502/2000 நாள் 24.8.2000ல் நிறைவேற்றப்பட்டபடி சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் 8 (எட்டு) தற்காலிக பணியிடங்களை மட்டும் 1.10.1998 முதல் 30.9.2001 வரையில் நீட்டிப்பு செய்து அரசாணை (வா) எண்.204, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.3) துறை, நாள் 12.2.2001ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடைசியாக இப்பணியிடங்களை அரசாணை (ப) எண்.169, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.3) துறை நாள் 18.5.2006ல் அரசு 1.10.2005 முதல் 30.9.2006 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்து அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது.

இப்பணியிடங்களை 1.10.2006 முதல் மேலும், ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் பின்னேற்பாணை தீர்மான எண்.458/06, நாள் 30.11.2006ல் பெறப்பட்டு அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. மீண்டும் 1.10.2007 முதல் மேலும், ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி தீர்மான எண்.704/2007, நாள் 29.12.2007ல் பெறப்பட்டு, அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு அரசாணை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்கண்ட அரசாணையில் நீட்டிக்கப்பட்ட 8 தற்காலிக பணியிடங்களை 1.10.2008 முதல் மேலும், ஓராண்டிற்கு நீட்டிக்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமான சமர்ப்பிக்கப்பப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/32395/2005**
**ஆணையாளர் அவர்களின் 16.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :596/2008 பொருள் எண்.60

**அயற்பணி நீட்டிப்பு**

திரு.எச்.ஏ.அம்மானுல்லாஹ், தோட்டக்கலை அலுவலர் அவர்கள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையரது 30.8.2005 நாளிட்ட செயல்முறை ஆணை மற்றும் 08.09.2005 நாளிட்ட சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணையின் படி சென்னை மாநகரட்சியில் 14.9.2005 முதல் பூங்கா கண்காணிப்பாளர் (தெற்கு) ஆக அயற்பணியில் பணிபுரிந்து வருகிறார்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையரது 31.12.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி திரு.எச்.ஏ.அம்மானுல்லாஹ், அவர்கள் தோட்டக்கலை அலுவலர் பதவியிலிருந்து தோட்டக்கலை உதவி இயக்குநராக பதவி உயர்வு பெற்ற நிலையில் அவருடைய பணியின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு, சென்னை மாநகராட்சியில் பூங்கா கண்காணிப்பாளராக தொடர அவருடைய தாய்த்துறையினை சென்னை மாநகராட்சி கேட்டுக்கொண்டதற்கினங்க, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையரது 18.1.2008 நாளிட்ட செயல்முறை ஆணையில் அயற்பணி விதிகளின்படி திரு.எச்.ஏ.அம்மானுல்லாஹ், உதவி இயக்குநர், அவர்கள் தொடர்ந்து சென்னை மாநகராட்சியில் அயற்பணியில் பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திரு.எச்.ஏ.அம்மானுல்லாஹ், (தோட்டக்கலை உதவி இயக்குநர்) பூங்கா கண்காணிப்பாளர், சென்னை மாநகராட்சி அவர்களின் அயற்பணிக்காலம் 13.9.2008 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. தற்போது, சென்னை மாநகராட்சியில் பூங்காத்துறையில் திரு.எச்.ஏ.அம்மானுல்லாஹ், (தோட்டக்கலை உதவி இயக்குநர்) , பூங்கா கண்காணிப்பாளர் அவர்களின் பணி அவசியமாக தேவைப்படுவதால், இதனை சிறப்பு நிகழ்வாக கருதி மேலும் ஓராண்டுக்கு அயற்பணியினை நீட்டிக்க அரசின் ஆணைப்பெற இவ்வலுவலரின் தாய்த்துறையான தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.ஜெ.ந.வே.வா.தி.எண்.220/2008**
**ஆணையர் அவர்களின் 06.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :597/2008 பொருள் எண்.61

**சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலில் சேர்ப்பதற்கு அனுமதி வேண்டி.**

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எப்2/23777/07 நாள் 06.08.2008 மற்றும்20.09.2008 மற்றும் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட வருவாய் சான்றிதழின்படி இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியம் பெறும் கீழே குறிப்பிடும் பட்டியலில் கண்டுள்ளவாறு 100912 நபர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலில் சேர்த்து அது குறித்து சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வட்டாட்சியர் அலுவலகம் | முதியோர் பென்சன் பெறுபவர்களின் எண்ணிக்கை | வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை | வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலில் பெயர் சேர்க்கப்பட வேண்டியவர்களின் எண்ணிகை |
|---|---|---|---|
| புரசைவாக்கம் – பெரம்பூர் | 29851 | 1376 | 28475 |
| கோட்டை தண்டையார் பேட்டை | 28435 | 1681 | 26754 |
| எழும்பூர் – நுங்கம்பாக்கம் | 12646 | 1238 | 11408 |
| மைலாப்பூர்– திருவல்லிக்கேணி | 11739 | 30 | 11709 |
| மாம்பலம் – கிண்டி | 23672 | 1106 | 22566 |
| மொத்தம் | 106343 | 5431 | **100912** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 100912 நபர்களின் பெயர், விலாசம் மற்றும் அவர்களின் வருமானம் குறித்து வட்டாட்சியர் அவர்களால் அளிக்கப்பட்ட சான்றிதழ் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள 100912 நபர்களை வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலில் சேர்க்க நிலைக்குழுக்கள் (கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.10.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மானஎண்.83/08நாள் 22.10.08 –ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.ஜெ.ந.வே.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :598/2008 பொருள் எண்.62

**சாலை வசதிக்காக நிலம் தானம் பெறுதல்**

திரு. எம். பாலசுப்ரமணியன், என்பவர் 18.08.2008 நாளிட்ட தனது கடிதத்தில் மண்டலம்–9, வார்டு எண்.130ல், பி.வி. ராஜமன்னார் சாலையிலிருந்து ஆற்காடு சாலை செல்வதற்கு பாதை குறுகலாக உள்ளதால் மேற்படி சாலையினை அகலப்படுத்துவதற்காக தங்களுக்கு சொந்தமான 5312 ச.அடி நிலத்தினை தானமாக அளிக்க முன் வந்துள்ளதாகவும், இந்த சாலை தங்களுக்கும், பொது மக்களுக்கும் மிகவும் அவசியமாக உள்ளதால் இந்த நிலத்தினை கையகப்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இச்சாலை அமைக்கும் பணிக்காக ஏற்படும் முதல் கட்டண தொகையினை செலுத்த தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இப்பொருள் சம்பந்தமாக 9வது மண்டல வார்டுகுழு தலைவர் 23.11.2007 நாளிட்ட கோரிக்கை மனு அளித்திருந்ததால், மேற்கண்ட நிலத்தினை இவ்வலுவலக சார்–நில ஆய்வாளரால் புலத்தணிக்கைச் செய்யப்பட்டு தானமாக அளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலங்களின் விவரம் மாம்பலம்–கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் நிரந்தர நிலப்பதிவேட்டில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

| வ. எண் | கிராமம் | பிளாக் எண் | நகர புல எண் | வகைப்பாடு | அடங்கல் | உபயோகம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கோடம்பாக்கம் | 95 | 40 | ச.புறம் போக்கு | பெரிய ஏரி | கூரை | த.நா.கு.ப.மா. வாரியம் |
| 2. | கோடம்பாக்கம் | 95 | 41 | ச.புறம் போக்கு | பெரிய ஏரி | தளம் | த.நா.கு.ப.மா. வாரியம் |
| 3. | கோடம்பாக்கம் | 95 | 42 | ச.புறம் போக்கு | பெரிய ஏரி | கூரை | த.நா.கு.ப.மா. வாரியம் |
| 4. | கோடம்பாக்கம் | 95 | 242 பா | ர. மனை | –– | சாலை | சென்னை மாநகராட்சி பி.வி. ராஜமன்னார் சாலை |
| 5. | கோடம்பாக்கம் | 95 | 243 பா | ச.புறம் போக்கு | பெரிய ஏரி | காலி யிடம் | த.நா.கு.ப.மா. வாரியம் |

மேற்படி இடங்கள் புல எண்.242 தவிர மற்ற புலங்கள் அனைத்தும் சர்க்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டு குறிப்பு கலத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் என பதிவுகள் உள்ளதாகவும், இந்த புலங்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் திட்டப்பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாக தெரிய வருவதாகவும், நிலத்தின் தன்மையினை பட்டா நிலமாக இதுவரை மாற்றப்படவில்லை எனவும், புல எண்.242ல் உள்ள நிலம் சென்னை மாநகராட்சி பி.வி. ராஜமன்னார் சாலை என பதிவுகள் உள்ளதால் இந்த புலத்தினை தானமாக பெறவேண்டிய கேள்வி எழாது எனவும், மேற்கண்ட நிலங்கள் அனைத்தும் காலியாக உள்ளதாகவும் இவ்வலுவலக சார் நில ஆய்வாளரால் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

கோடம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.95, நகர அளவை எண்.40,41 மற்றும் 42ல் கண்டுள்ள நிலங்கள் கன்னிகாபுரம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திட்டப்பகுதியிலுள்ள நிலங்களாகும். இந்த மூன்று புலங்களிலுள்ள நிலங்களின் மொத்த பரப்பளவு வட்ட அலுவலக கணக்குகளின்படி 1631 ச.அடி. ஆகும்.

இந்த மூன்று புலங்களிலுள்ள நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் முறையே (1) பவானி க/பெ. மணிவேல் (2) சுப்பைய்யா த/பெ. வீரப்பன் (3) சுலோசனா க/பெ. அருண் ஆகியோர்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கியிருப்பதும், பின்னர் இப்புலங்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து தடையின்மை சான்றினை பெற்று இப்புலங்கள் ஒதுக்கீடுதாரர்களால் விற்பனை செய்யப்பட்டு, இப்புலங்களுக்குண்டான கிரயப்பத்திரங்கள் திரு.எம்.பாலசுப்ரமணியன் என்ற பெயருக்கு பதிவாகி உள்ளதும் மனுதாரர் அளித்துள்ள ஆவணங்களிலிருந்து அறிய வந்துள்ளது.

கோடம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.95, நகர அளவை எண்.243ல் கண்டுள்ள நிலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட காலி மனையாக உள்ளது. இதனால் மனுதாரர் இந்த நிலத்தினை தானமாக அளிக்கும் நிலை எழாது.

மேற்படி கோடம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.95, நகர அளவை 243 பாகத்தில் உள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமான நிலத்தினை சென்னை மாநகராட்சியின் பிற்கால வளர்ச்சி பணிகளுக்காக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து கோரி பெறுவதற்கு 9வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.78/2008, நாள் 26.03.2008 இல் பரிந்துரை செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்படி நிலத்தினை சாலை விரிவாக்கம் செய்வதற்காகவும், பூங்கா அமைப்பதற்காகவும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து பெறுவதற்கு மன்றத் தீர்மானம் எண்.468/2008, நாள் 27.08.2008ல் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்குமாறு கோரி 11.09.2008 நாளிட்ட கடிதம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு எழுதப்பட்டுள்ளது.

தற்போது பி.வி. இராஜமன்னார் சாலையும், கன்னிகாபுரம் 4வது தெருவும் இணையும் இடத்தில் தானமாக அளிக்கப்படவுள்ள தனியாருக்கு சொந்தமான கோடம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.95, நகர அளவை 40,41 மற்றும் 42ல் உள்ள 1631 ச.அடி. நிலத்தினை எடுத்துக் கொள்ளவும், மேலும் இந்த நிலத்தினை எடுத்துக்கொண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து பெறப்படும் நிலத்தினையும் சேர்த்து அகலமான சாலை அமைப்பதற்கும் மற்றும் அதனை ஒட்டினாற் போல் சாலையோர பூங்கா அமைக்கவும் 9வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.134, நாள் 28.07.2008 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி திரு. எம். பாலசுப்ரமணியம் என்பவரிடமிருந்து தானமாக பெறப்படும் இடத்தினை சாலை விரிவாக்க பணி மேற்கொள்வதற்காக மேம்பாட்டு கட்டணத் தொகை ரூ.3.40 லட்சம் 2008–2009 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி செலவாகும் என மண்டல அலுவலர்–9 அவர்களின் 20.09.2008 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்–9ன் வார்டு குழு தீர்மானத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள கோடம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.95ல், நகர அளவை எண்.40,41 மற்றும் 42ல் உள்ள 1631 ச.அடி. பரப்பளவு கொண்ட நிலத்தினை சாலை விரிவாக்கம் செய்வதற்காக ஏற்படும் முதல் கட்ட செலவினமாக ரூ.3.40 லட்சத்தினை மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொண்டு மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக பெற்றுக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.275/2008, நாள்: 24.10.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**<u>பே.சா.து.ந.க.எண்.பி4/3101/2008</u>**
**<u>ஆணையர் அவர்களது 23.10.08 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :599/2008 பொருள் எண்.63

**<u>திருவாளர்கள் சென்னை சிட்டி கனெக்ட் நிறுவனத்தை சென்னை நகரில் உள்ள நடைபாதை மற்றும் நடைபாதை சார்ந்த வசதிகளை உலக தரத்திற்கு ஒப்பாக மேம்படுத்த கௌரவ கலந்தறிபவர்களாக நியமிக்க அனுமதி</u>**

சென்னை சிட்டி கனெக்ட் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர், திரு. ராஜ் செருபல் அவர்கள் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து சென்னை மாநகரில் உள்ள நடைபாதைகளை மேம்படுத்துவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்.

சென்னை சிட்டி கனெக்ட் (Chennai City Connect) என்பது பதிவு செய்யப்பட்ட லாப நோக்கில் செயல்படாத அறக்கட்டளை. சென்னை நகரின் பல்வேறு முக்கிய பிரச்சனைகள் சரி செய்ய தேவையான அறிவார்ந்த உதவிகளை அரசு நிறுவனங்களுக்கு செய்வது இதன் முக்கிய நோக்கம்.

சென்னை மாநகரில் நடைபாதைகளை உலக தரத்திற்கு ஒப்பாக மேம்படுத்த தொழில்நுட்ப உதவிகளை செய்ய சென்னை மாநகராட்சிக்கு சென்னை சிட்டி கனெக்ட் நிறுவனம் கௌரவ அடிப்படையில் செய்ய முன் வந்துள்ளது.

இதன் முதற்படியாக, மண்டலம் – 10 டாக்டர் முத்துலட்சுமி சாலையில் (Lattice Bridge Road) சாஸ்திரி நகர் சந்திப்பு முதல் மகாத்மா காந்தி சாலை சந்திப்பு வரையிலுள்ள நடைபாதை மற்றும் நடைபாதை சார்ந்த வசதிகளை சோதனை முறையில் மேம்படுத்த இசைவு தெரிவித்துள்ளார். இப்பணி முடிவுற்ற பின் இதனை சென்னை மாநகரின் மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யலாம்.

திருவாளர்கள் சென்னை சிட்டி கனெக்ட் நிறுவனத்தை சென்னை நகரில் உள்ள நடைபாதை மற்றும் நடைபாதை சார்ந்த வசதிகளை உலக தரத்திற்கு ஒப்பாக மேம்படுத்த கௌரவ கலந்தறிபவர்களாக நியமிக்கவும் மற்றும் திருவாளர்கள் சென்னை சிட்டி கனெக்ட் அவர்களுடன் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துக்கொள்ளவும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.276/2008, நாள்: 24.10.2008–ன்படி இத்திட்டம் மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து செயல்படுத்தப்படும் என்றும், சென்னை சிட்டி கனெக்ட் நிறுவனம் சென்னை மாநகராட்சிக்கு இத்திட்டத்திற்கு தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பவர் என்ற திருத்தத்துடன் இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/52255/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :600/2008 பொருள் எண்.64

**பணியமைப்பு – மண்டல அலுவலர் தேர்ந்த பட்டியல் மற்றும் பணி நியமனம்**

சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 10 ஆகும். இவற்றில் ஒரு பணியிடம் சென்னை மாநகராட்சி அலுவலரைக் கொண்டும் மற்றொரு பணியிடம் அயற்பணி அடிப்படையிலும் நிரப்பப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிப் பணியமைப்பில் மண்டல அலுவலர் பதவி வகுப்பு–1ஏ–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85(3)(ஏ)ன்படி இப்பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி பணி நியமனம் செய்ய அரசு அதிகாரம் பெற்றுள்ளது.

தற்போது சென்னை மாநகராட்சியில் எஞ்சியுள்ள 8 மண்டல அலுவலர்களின் பணியிடங்களுக்கு தேர்ந்த பெயர் பட்டியல் தயார் செய்து அரசின் ஒப்புதல் பெற்று அரசால் பணியமர்வு ஆணை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

அரசாணை எண்.291, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள்.12.11.1996ன்படி மண்டல அலுவலர் பதவிக்கான பணி விதிகள் பின்வருமாறு :

| Name of the post / Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Zonal Officer (ஊதிய விகிதம் ரூ.12000–375–16500) | (i) By appointment of Junior I.A.S., Officers or District Revenue Officers on deputation; or<br>(ii) By appointment of Municipal Commissioners of Special Grade and above from Tamil Nadu Municipal Commissioner Service on deputation; or<br>(iii) By appointment of officers from any other State Service on deputation; or<br>(iv) By transfer from the holders of the post of Additional Revenue Officers and by promotion from the holders of the post of Chief Accounts Officer and Personal Assistant to Commissioner, or<br>(v) By promotion from the holders of the post of Additional Health Officer; or<br>(vi) By promotion from the holders of the post of Executive Engineer and Divisional Electrical Engineer; and the ratio between the officers in item Nos. (iv), (v) and (vi) shall be 3 : 2 : 5.<br>*EXPLANATION* : Promotion to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal. | 1) Graduate of any recognized University.<br><br>2. Must have worked atleast for period of 3 years in the category from which they are selected by promotion<br><br>3) Must have passed Account Test for Subordinate Officers Part I or Account Test for Executive Officers. |

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/52255/2007</u>

இப்பதவிக்கு தேர்ந்த பெயர் பட்டியல் தயாரிக்க மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ம் தேதி ஆகும். 01.07.2003, 01.07.2004, 01.07.2005 மற்றும் 01.07.2006 ஆகிய மைய நாட்களைக் கொண்டு மேற்படி அட்டவணையில் தெரிவித்துள்ளபடி 3 : 2 : 5 (முறையே பொதுப்பிரிவு, சுகாதாரப் பிரிவு, பொறியியல் பிரிவு) என்ற விகிதாச்சாரத்தில் தயாரிக்கப்பட வேண்டிய மண்டல அலுவலருக்கான தேர்ந்த பெயர் பட்டியல் நிர்வாக காரணங்களினால் தயாரிக்கப்படவில்லை.

சென்னை மாநகராட்சியில் திட்டங்கள் பலவற்றினை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததால், காலியாகவுள்ள அனைத்து மண்டல அலுவலர் பதவிகளை நிரப்ப வேண்டியது அத்தியாவசியமானது. எனவே, அவசர அவசியம் கருதி, மண்டல அலுவலருக்கான மைய நாள் 01.07.2007க்கு பதிலாக, 01.04.2007 மாற்றி அமைத்து தேர்ந்தப் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத் தீர்மான எண்.273/2007, நாள்.28.05.2007ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் அரசாணையினை எதிர்நோக்கியும் பின்வரும் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள செயற்பொறியாளர்களுக்கு தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| 01. | திரு.ஜெ. அட்லி |
| 02. | திரு.எஸ். முத்திருளப்பன் |
| 03. | திரு.வி.சி. ராஜசேகரன் |
| 04. | திரு. எம்.எஸ். பிரேம்நாத் |
| 05. | திரு.ஜெ. வேணுகோபால் |
| 06. | திரு.எம். கிருஷ்ணமூர்த்தி |
| 07. | திரு.ஏ. ஞானமணி |
| 08. | திரு.எம். சம்பத் |

இந்நிகழ்விற்கு அரசாணை கோரி 05.07.2007 தேதியிட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசு கடித எண்.22076/மாந3/2007–1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.10.2007ல் மண்டல அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–1ஏ என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவிக்கு நியமன அதிகாரி அரசாகும் என்றும், மண்டல அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டு ஜூலை 1ம்தேதி என்றும், மேற்படி பதவிக்கு 01.04.2007 என்று மைய நாளாகக்கொண்டு தயாரித்து பணிநியமனம் வழங்கப்பட்ட செயல் விதிக்கு முரண்பட்டதாகும் என்றும், இதனை அரசால் ஏற்பதற்கில்லை என்று தெரிவித்து மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்ட செயல்முறை ஆணையை ரத்து செய்த பின் 01.07.2007ஐ மைய நாளாகக் கொண்டு புதிய தெரிவுப்பட்டியல் மற்றும் பணிநியமனம் குறித்த செயற்குறிப்புடன், 01.07.2003, 01.07.2004, 01.07.2005 மற்றும் 01.07.2006க்கான தேர்ந்தப் பெயர்ப்பட்டியல் இல்லை (Nil Panel) என்ற அறிக்கையையும் அரசுக்கு அனுப்புமாறும் அரசு கேட்டுக்கொண்டது.

அரசு அறிவுறுத்தியுள்ளபடி, மேற்படி பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள 8 நபர்களை மண்டல அலுவலர் பதவியிலிருந்து செயற்பொறியாளராக இவ்வலுவலக செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/28020/2006, நாள்.26.05.2008ன்படி பதவி இறக்கம் செய்யப்பட்டனர்.

மேலும், மண்டல அலுவலர் பதவிக்கான தேர்ந்தப் பெயர் பட்டியல் 01.07.2007ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

பொதுப்பிரிவின் கீழ்வரும் பதவிகளான கூடுதல் வருவாய் அலுவலர், தலைமை கணக்கு அலுவலர் ஆணையரின் நேர்முக உதவியாளர் மற்றும் கூடுதல் சுகாதார அலுவலர் பதவிகளில் தகுதிவாய்ந்த நபர்கள் ஊட்டப்பதவியில் மூன்று ஆண்டுக்காலம் பணி நிறைவு செய்யாததாலும் 01.07.2007ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்படும் தேர்ந்த பட்டியலில் பொறியியல் பிரிவில் பணிமூப்பு அடிப்படையில் தகுதிபெற்றுள்ள செயற் பொறியாளர்களின் பெயர்களைக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1. | திரு.பி.ஆர். எம்ரோஸ் | இவர் வங்கிக் கணக்குகளை பொறுப்புள்ள அலுவலருக்கு மாறுதல் செய்யாமல், தன்னிச்சையாக விடுப்பில் இருந்துகொண்டு, காசோலைகளை பணமாக மாற்றிட கையொப்பம் இட்ட செயலுக்காக தனியர்மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தண்டனையாக தனியரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்திவைக்க அரசாணை எண்.226, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.04.2004ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இவர் அடிக்கடி விடுப்பில் சென்ற காரணத்தினாலும், முக்கிய பணிகளில் ஒன்றான பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தினை 04.01.2003க்கு முன்பு ஒருமுறைகூட பார்வையிடாத அலட்சிய போக்கினாலும் இவர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், இவருக்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஆறு மாத காலத்திற்கு நிறுத்திவைக்க அரசாணை எண்.293, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.06.2004ல் ஆணைவழங்கப்பட்டுள்ளது.<br>மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப் பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ள போதிலும் களப்பணியில் போதிய அனுபவம் இல்லாததாலும், முந்தைய பதவியில் இவரது பணி திருப்திகரமாக இல்லாததாலும் இவரது பெயரினை பட்டியலில் இருந்து தவிர்க்கலாம். |
| 2. | திரு.எஸ்.வி. மதியழகன் | மேற்பார்வை பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதால் இவரது பெயரினை தவிர்க்கலாம். |
| 3. | திரு.ஆர். குமரேசன் | மேற்பார்வை பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதால் இவரது பெயரினை தவிர்க்கலாம். |
| 4. | திரு.எஸ். மோகன்ராஜ் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 5. | திரு.யு. பெருமாள் | இவர் மீது கடுங் குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலில் இவரது பெயரினை ஒத்திவைக்கலாம். |

| | | |
|---|---|---|
| 6. | திரு.ஜெ. அட்லி | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள படி முழு தகுதிகள் பெற்றுள்ளதால் இவரது பெயரினை தேர்ந்த பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 7. | திரு.எஸ். முத்திருளப்பன் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள படி முழு தகுதிகள் பெற்றுள்ள போதிலும், இவரது பணியில் குறைபாடுகள் குறித்து இவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கண்டனம் (Censure) என்று தண்டனை வழங்கப்பட்டுள்ளதால் விதிகளின்படி இவரது பெயரினை தேர்ந்த பெயர் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கலாம். |
| 8. | திரு. வி. சி. ராஜசேகரன் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள படி முழு தகுதிகள் பெற்றுள்ள போதிலும், இவர் மீது கடுங் குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மண்டல அலுவலர் பதவிக்கான தேர்ந்த பட்டியலில் இவரது பெயரினை ஒத்திவைக்கலாம். |
| 9. | திரு.கே. கேசவன் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 10. | திரு.எம்.எஸ். பிரேம்நாத் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள படி முழு தகுதிகள் பெற்றுள்ளதால் இவரது பெயரினை தேர்ந்த பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 11. | திரு.என்.யூ. கிருஷ்ணாநந்தம் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 12. | திரு.எஸ்.என். சங்கர் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 13. | திரு.ப்பி. சக்கரவர்த்தி | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 14 | திரு.ஜி. ரமேஷ் | இவர் மீது கடுங் குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவர் தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளார். மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலில் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 15. | திரு.ஆர். சீனிவாசன் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |

| | | |
|---|---|---|
| 16. | திரு.ஏ. வின்சன்ட் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 17. | திரு.சி. சார்லஸ் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ள போதிலும், இவர் மீது கடுங்குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேகொள்ளப்பட்டுள்ளதால் மண்டல அலுவலர் பதவிக்கான தேர்ந்த பட்டியலில் இவரது பெயரினை ஒத்திவைக்கலாம். |
| 18. | திரு.கே. யதுகுலராவ் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 19. | திரு.ஜெ. வேணுகோபால் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ளதாலும் இவரது பெயரினை தேர்ந்த பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 20. | திரு.ஆர். மகாலிங்கம் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 21. | திருமதி.ஆர். சுதா | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ள போதிலும் களப்பணியில் போதிய அனுபவம் இல்லாததாலும், முந்தைய பதவியில் இவரது பணி திருப்திகரமாக இல்லாததாலும் இவரது பெயரினை பட்டியலிலிருந்து தவிர்க்கலாம். |
| 22. | திரு.எம். கிருஷ்ணமூர்த்தி | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ளதால் இவரது பெயரினை தேர்ந்த பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 23. | திரு.ஏ.ஞானமணி | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ளதால் இவரது பெயரினை தேர்ந்த பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 24. | திரு.கே. வரதராஜி | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| 25. | திரு.எம். பன்னீர் செல்வம் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளில் இவர் மூன்றாண்டு காலம் செயற் பொறியாளர் பதவியில் பூர்த்தி செய்யாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |

| | | |
|---|---|---|
| **26.** | திரு.ஏ. வேணுகோபால் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளில் இவர் மூன்றாண்டு காலம் செயற் பொறியாளர் பதவியில் பூர்த்தி செய்யாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| **27.** | திரு.ஏ. சுப்பிரமணியன் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளில் இவர் மூன்றாண்டு காலம் செயற் பொறியாளர் பதவியில் பூர்த்தி செய்யாததால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலாது. |
| **28.** | திரு.சி. பூமிநாதன் | இவர் மீது கடுங் குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலில் இவரது பெயரினை ஒத்திவைக்கலாம். |
| **29.** | திரு.எம். சம்பத் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ளபோதிலும், அரசாணை எண்.144, ந.நி.ம.கு.வ.(எம்ஈ4) துறை, நாள்.28.03.2008 இவர் மீது கடுங் குற்றச்சாட்டுகள் சுமர்த்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.<br>எனினும், அரசு கடித எண்.18824/எஸ்/2005–2, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்.07.10.2005ன்படி தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படும் வேளையில், அலுவலர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பினும், கடுங் குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் ஏதும் சுமத்தப்படாத நிலையிலிருப்பின், அதை அலுவலருக்கு எதிராக கருத வேண்டியதில்லை.<br>மண்டல அலுவலர் பதவிக்காக பரிந்துரைக்கப்பட்டிருக்கும் இவர்மீது இதுகாறும் கடுங்குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாத காரணத்தினால், இவரது பெயரினை மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| **30.** | திரு.எம். பரசுராமன் | மண்டல அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ளபடி முழு தகுதிகள் பெற்றுள்ளதால் இவரது பெயரினை தேர்ந்த பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |

எனவே,

அ) மண்டல அலுவலருக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியல் நிர்வாக காரணங்களினால் தயாரிக்கப்படவில்லை என்பதால் 01.07.2003, 01.07.2004, 01.07.2005 மற்றும் 01.07.2006க்கான தேர்ந்தப் பெயர்ப்பட்டியல் “ இல்லை ” (Nil Panel) என்று அரசுக்கு அறிக்கை அனுப்பவும்,

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/52255/2007</u>

ஆ) மேற்படி பட்டியலில் வரிசை எண்.1,2,3 மற்றும் 21லுள்ள பெயர்களை (அவர்கள் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக) தவிர்த்தும், வ.எண்.5,7,8,17 மற்றும் 28 ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும் இவர்களது பெயர்களை ஒத்தி வைத்தும், வ.எண்.4,9,11,12,13,15,16,18,20,24 ஆகியோர் துறைத் தேர்வான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததால் அவர்களது பெயர்களை பரிசீலிக்க இயலாது என்பதாலும், வ.எண்.14லுள்ளவர் தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளதாலும், வ.எண்.25,26,27 ஆகியோர் ஊட்ட பதவியில் மூன்றாண்டு காலம் பணி நிறைவு செய்யாததாலும், பின்வரும் ஏழு செயற் பொறியாளர்களின் பெயர்களை கொண்ட பட்டியலை உதவி செயற்பொறியாளர் பதவியில் பணி மூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டு, மண்டல அலுவலருக்கான தேர்ந்த பெயர் பட்டியலாக ஒப்புதல் அளித்து பணி நியமனம் வழங்கக் கோரி, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 01. | திரு.ஜெ. அட்லி |
| 02. | திரு. எம்.எஸ். பிரேம்நாத் |
| 03. | திரு.ஜெ. வேணுகோபால் |
| 04. | திரு.எம். கிருஷ்ணமூர்த்தி |
| 05. | திரு.ஏ. ஞானமணி |
| 06. | திரு.எம். சம்பத் |
| 07. | திரு.எம்.பரசுராமன் |

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்